[illegible]

VII No4 April 1989

TL
[illegible]
N59.11.4.

210723

REGD NO: M 1530.

# "BALAVINODHINI"

## CHILDREN'S FRIEND

# பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XI | APRIL 1929 | No 4



PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

N. B. Subscribers are requested to pay subscriptions our agents only on obtaining our Bonafide receipts.

All Rights Reserved by the Publishers.

# பாலவிநோதினி

CONTENTS—பொருளடக்கம்

பக்கம்.


| | |
|---|---|
| தெய்வ வணக்கம் ... ... | 161 |
| ஹிதோபதேசம் ... ... | 162, 163 |
| உற்றதுரைக்கில் அற்றது பொருந்தும் | 164—171 |
| ஸ்ரீமகாலக்ஷ்மிக்கும் பார்வதிக்கும் தர்க்கம் ... ... ... | 172 |
| மீன்களின் சம்பாஷணை ... | 173—177 |
| இரக்கமுள்ளவர் இரக்ஷிக்கப்படுவர் | 178—180 |
| விவேகசோதனை ... ... | 181 |
| உலகநிலை ... ... ... | 182, 183 |
| பாபியின் பொருள் ... ... | 184, 191 |
| கபடமற்றவன் கண்பார்வை யடைந்தது | 192—195 |
| காவேரி நதி ... ... | 196—202 |
| குருவின் வஞ்சகமும் மாணவனின் விவேகமும் ... ... | 203—208 |
| மின்சார விளக்கால் கண்ணுபாதை. | 208 |


குறிப்பு:—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

# BEAUTY AND UTILITY

Making beauty useful by making utility beautiful is one of the true offices for craftsmanship, Here, useful things, necessities of every day, gold and silverware, jewellery, are wrought in form and fashion and detail of charm and beauty which interest them with their double value.

From these, thoughtful friends, may in making their wedding Gifts, surround the bride with a beauty that is useful and a utility that is beautiful.

SURAJMAL LALLUBHAI & CO.,

Diamond Merchants, Jewellers, Gold and Silversmiths,

313, Esplanade, Madras. 135, Big Bazaar, Trichinopoly. 12, Lal Bazaar St., Calcutta. 134, Mogul St., Rangoon.



# இஞ்சி வைத்தியவித்தியா

வாசிப்பதற்கு இனிமையுள்ளதும் சற்புத்தி புகட்டக் கூடியதுமான இப்புத்தகம், தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய

நாராயணஜீ கேசவஜீ,

நெ. 1/94, சைனபஜார் ரோட். சௌகார்பேட், மதராஸ்.

---

## Moral class reading books for the young

BY

**Varakavi Tiru: A SUBRAMANYA BHARATI**

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| இராமாயண இரகசியம் | 0 | 12 | 0 |
| ஸ்ரீராமச்சந்திரன் — நல்ல பிள்ளை | 0 | 2 | 6 |
| பரதன் — நல்ல தம்பி | 0 | 3 | 0 |
| ஸீதாதேவி — நல்ல மனைவி | 0 | 4 | 0 |
| குகன் — சிறந்த நண்பன் | 0 | 2 | 6 |
| மாருதி — நல்ல அடிமை | 0 | 2 | 6 |
| விபீஷணன் — சிறந்த பக்தன் | 0 | 1 | 6 |

*For Copies, please apply to :—*

**BALAVINODINI OFFICE,**

**323, Tiruvottiyur High Road, MADRAS.**

---

## MADAN MANJARI PILLS

பூலோக அமிர்தமென்று புகழப்படுகின்ற இம் மாத்திரை அஜீரணம், மலச்சிக்கல், ரத்தக் குறைவு இவைபோன்ற சாதாரண வியாதிகளேயும், நரம்புத் தளர்ச்சி நபும்சகத்துவம் இவை போன்ற விசேஷ வியாதிகளேயும் நீக்கி இளமையைக் கொடுப்பதில் நிகரற்றது.

**40-மாத்திரைகள் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1 0 0**

மதன் மஞ்சரி ஆபீஸ், 1/94, சைன பஜார் ரோட், மதராஸ்.

---

எங்கும் புகழ்பெற்ற

## பி. வி. ராஜன் பட்டணம் பொடி




காரம், மணம், குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 4. ஷை சாதா ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா $3\frac{1}{2}$.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L C. அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

**R. S. சுகந்த மூக்குத்தூள்**

விலை பாடல் 1-க்கு அணு 4. டஜன் 1-க்கு ரூபா 2 4 0 ஷை ஒரு சேர் டின் 1-க்கு ரூபா. 1 12 0 விபரங்களுக்கு எழுதவும். வி.பி. ரயில் சார்ஜ் வகையரு பிரத்யேகம்.

விலாசம்:—பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ. 44. கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "நஸ்யம்"

---

## மதனகாமேஸ்வர லேகியம்

இது மிக்க பலமும், வீரியவிருத்தியு முண்டாக்குவதில் மிக்க சிரேஷ்டமானது. மேகம், வெட்டை, பலயீனம், சுக்கிலநஷ்டம், நீர் வியாதி முதலான நோய்களை நீக்கி பலமும், காந்தியும், சம்போகசத்தியும், சந்தானபிராப்தியு முண்டாக்குவதில் நிகரற்றது.

இரண்டு டப்பிகள் போதுமானது.

| | | | |
|---|---|---|---|
| 20 தோலா டப்பி 1-க்கு ரூபா ... ... | 1 | 4 | 0 |
| வி.பி. சார்ஜு ... ... ... ... | 0 | 6 | 0 |

**பி. சி. ஏ. அண்ட் கம்பெனி,**

ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, நெல்லூர் ஜில்லா.

## யூகலிப்டஸ் ஆயில்

ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டிய
சுத்தமான நீலகிரித் தைலம்.

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷஜந்துக்களின்கடி, கத்தி வெட்டுக்காயங்கள், நரம்புச்சுளுக்குகள், தீப்புண்கள், வெந்நீர்பட்டு வெந்தபுண்கள், பிளவைகள் புரைபோன ரணங்கள், இன்புளுவென்ஸா, மலேரியா முதலிய சகலவித சுரங்கள், இருமல், வாய்வுபிடிப்பு, குடைசசல், வாய்வினால் உண்டாகும் கோரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல், கண்கட்டி முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

| | ரூ. | அ. | ப. | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அவுன்ஸ் புட்டி 1-க்கு | 0 | 4 | 0 | வி.பி. சார்ஜ் ... ... | 0 | 4 | 0 |
| 1 ,, 1 டஜன் (12) | 2 | 8 | 0 | வி.பி. சார்ஜ் ... ... | 0 | 12 | 0 |
| 1 அவுன்ஸ் புட்டி குரோஸ் 1-க்கு ... ... | 28 | 0 | 0 | பாக்கிங் ரயில் சார்ஜ் வேறு. | | | |
| ½ ,, டஜன் 1-க்கு | 1 | 8 | 0 | வி.பி. சார்ஜ் ... ... | 0 | 10 | 0 |
| ½ ,, குரோஸ் ,, | 17 | 0 | 0 | பாக்கிங் ரயில் சார்ஜ் வேறு. | | | |
| 24 அவுன்ஸ் புட்டி 1-க்கு | 2 | 8 | 0 | வி.பி. சார்ஜ் ... ... | 1 | 1 | 0 |
| ஷை புட்டி டஜன் 1-க்கு | 28 | 0 | 0 | பாக்கிங் ரயில் சார்ஜ் வேறு. | | | |

T. C. நாகலிங்கப்பா & கம்பெனி,
நெ. 280, வால்டாக்ஸ் ரோட்டு, பார்க்டவுன் போஸ்டு, சென்னை.

---

# FEDERATED INDIA

**(An all India English Weekly)**

***PUBLISHED EVERY WEEK***

**Annual Subscription Rs. 5.**

PLEASE APPLY TO:—
THE MANAGER,
'FEDERATED INDIA,'
TONDIARPET, MADRAS.

## ராமுலு புதிய ஸங்கீதம்

வித்வான் கெ. வி. ஸ்ரீநிவாச அய்யங்கார்
இயற்றியது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஸங்கீத சிந்தாமணி ... | ரூபா | 3 | 0 | 0 |
| 2. திராவிட கானம் ... | ,, | 3 | 0 | 0 |
| 3. ஸங்கீத சில்லரைக்கோர்வை | ,, | 3 | 0 | 0 |
| 4. ராமுலு கீர்த்தன ரத்னங்கள் | ,, | 1 | 4 | 0 |

குறிப்பு:—மேற்குறித்த நான்கு ஸங்கீதபுஸ்தகங்களின், முழு விபரமான கீர்த்தனை அட்டவணையுடன் கூடிய கேட்லாக்கு, விலாசம் தெரிவித்தால் இனமாய் அனுப்பப்படும்.

---

## திகம்பரசாமியார் பால்யலீலை

இரண்டு பாகம் விலை ரூபா 5.

இது எத்தனையோ அற்புதமான நாவல்களை எழுதித் தங்க மெடல்களும் நற்புகழும் பெற்றுள்ள நூலாசிரியரான நமது வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள், B.A. யால் எழுதப்பட்டது. மேற்படி நூலாசிரியர் எழுதி, எழுதி அநுபவ முதிர்ச்சியும் கைதேர்ச்சியும் பூரணமாக பெற்றிருக்கும் பரிபக்குவநிலைமையில் சமீபகாலத்தில் இந்த நாவல் சுயமாக எழுதப்பெற்றதாகையால் புஸ்தகத்தில் இரண்டொரு வரிகளைப் படிக்கத்தொடங்கும் பொழுதே தேனும் அமிர்தமும் ஊறுமென்பதில் ஐயமே இல்லை. ஆகையால் இதுவரையில் எழுதப்பட்டுள்ள அருமையான நாவல்கள் யாவற்றிற்கும் இது சிரோரத்னம்போல விளங்கும் மாண்புடையது.

| | | | | |
|---|---|---|---|---|
| சரோஜனி .... .... | ரூபா | 2 | 0 | 0 |
| குடும்ப விநோதக்கதைகள். | ,, | 2 | 0 | 0 |
| பச்சை மோதிரமர்மம் .... | ,, | 1 | 0 | 0 |

எம். எஸ். ராமுலு அண்டு கம்பெனி,
புத்தக வியாபாரிகள், இராயபுரம், மதராஸ்.

## மதனகாமேசுவர லேகியம்
## Madana Kameswara Laghiyam

**வாலிபத்தில் வன்மை—வயோதிகத்தில் வாலிபம்.**

வாலிபத்தை அவமாக்காமலும், இளமைச் செல்வத்தை இழந்து விடாமலும் காப்பாற்றக்கூடிய லேகியம் இதுவே. தன்னுடைய போகசக்திக் குறைவினால் ஒருவன் தன் மனதிலே சங்கடப்படும் குறையைத் தீர்க்கக்கூடியது. ஆண்மலட்டு ரோகத்தை நீக்கி விந்து விளைவை அதிகரித்து புத்திரபாக்கியத்தைக் கொடுக்கும் நல்வரம் இதுவே. போகத்தில் அதிக சுகத்தைக்கொடுத்து மனதுக்கு உற்சாகத்தையும் தைரியத்தையும் உண்டுபண்ணும். இதைச் சரிவர தினந்தோறும் சாப்பிட்டுவர வீரியம் அதிகரிக்கும். தேகம் சிவந்து மேனி இடும்; கண் குளிர்ந்து பிரகாசிக்கும்; ஈளை, இருமல், மந்தம், சூலை, பழைய சுரம், க்ஷயம் இவைகளை நீக்கும். தேக ஆரோக்கியமுமுண்டாகும். சேர் 1-க்கு விலை ரூபா 3.

*N.B.*—கடிதம் எழுதினால் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

அகில இந்தியா ஆயுர்வேத பார்மஸி,
நெ. 411, தங்கசாலை வீதி, தபால் பெட்டி 159, மதராஸ்.

---

## சித்தானந்த சிட்டுக்குருவி லேகியம்

இதன் கிரயம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 96 வேளை | 48 நாள் | லேகிய டப்பி விலை | ரூ. | 15 | 0 | 0 |
| 48 ,, | 24 ,, | மருந்து டப்பி 1-க்கு | ,, | 8 | 0 | 0 |
| 24 ,, | 12 ,, | ஷை | ,, | 4 | 4 | 0 |

எவ்விதமான பத்தியமில்லை. சிங்கை, பினாங், கொச்சின், சீனா, ஜாவா, சுமாத்ரா முதலிய ஊராரும் மருந்து கிரயமும் போஸ்ட் சார்சு ரூபா 2 சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும்.

## தாமரை லிங்கத்தைலம்.

கனவான்களே! இந்த அருமையான தைலத்தை மூன்று தடவை போதுமான அளவு எடுத்து தளர்ந்து சோர்வடைந்த கருவிகளின்மீது தேய்த்துவிடுவீர்களானால் தாங்கள் இதுவரையில் பார்த்திராத ஆச்சரியத்தைத் தரும்படியான கருவிகளைப் பெருக்கச்செய்து நரம்புகளுக்கு பலமும் திமிரும் உண்டாக்குமென்பது நிச்சயம்.

1 அவுன்ஸ் தகரபாட்டில் விலை 1—0—0 வி. பி. பாக்கிங் செலவு பிரத்தியேகம். ஸாஹேறபியா மருந்துசாலை,
நெ. 146, பிராட்வே, சென்னை.

ஆர்டர் செய்யும்போது தயவுசெய்து பத்திரிகை பேரைக் குறிப்பிடவும், கேட்லாக் இனாம்.



# THE LAW OF ELECTION

**BY**

**K. L. NARASIMHA RAO,**

*Advocate, High Court, Madras.*

☞ Contains all the Acts, Rules, Regulations, and Forms, brought up-to-date regarding Elections to every Statutory Body from the Village Panchayat to the Council of State. Indispensable to every public-worker and practitioner.

**Price Rs. 3-8-0.** *(Postage Extra.)*

"**SRI RAMA PRESS**" *3, Sivaramulu Chetty St., Tondiarpet, MADRAS.*

---

## எந்தப் புஸ்தகம் வேண்டும்?

தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், சம்ஸ்கிருதம், கிரந்தம் முதலிய பாஷைகளில் வெளியிடப் பட்டுள்ள நூல்களில் எப்புஸ்தகம் தங்களுக்கு வேண்டியபோதிலும், நேரில் எங்களுக்கு எழுதவும். வெளியூர் ஆர்டர்கள் தாமதமின்றி கவனிக்கப்படும்.

வாவிள்ள
ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு சன்ஸ்,
புத்தகவியாபாரிகள், எஸ்பிளனேட், சென்னை.

**Dr. Matameswara Row,**

Physician and Surgeon,

ASTHMA SPECIALIST.

பெஜவாடா சிவாலயத் தெருவில் கனம் சேகுவார் மெத்தையில் பழைய போலீஸ் ஸ்டேஷனருகில் டாக்டர் மடமேஸ்வரராவ் என்னும் பம்மாய் வைத்தியர் ஔஷத ஆலயம் திரந்திருக்கிறார். இவர் நீர்கடுப்பு, (Asthma) இருமல் இந்த நோய்களை நீக்குவதில் வெகுநிபுணர். இயாரண்டியுடன் வைத்தியம் செய்யப்படும். கண்வைத்தியமும் செய்வார். மேகவியாதிகளுக்கும், சுகசம்பந்தமான நோய்களுக்கும் நல்ல சிகிச்சை செய்யப்படும். இந்த வியாதின் இரகசியமாய் பார்த்து வைத்தியம் செய்யப்படும். இவர் ரணவைத்தியமும் செய்வார். ஸ்திரீகளுக்கு மருத்துவமும் செய்யப்படும். கல்விச்சாலை மாணுக்கர்களுக்கு மலிவாய் வைத்தியம் செய்யப்படும்.

ஷரா:—ஏழைகளுக்கு தருமமாய் வைத்தியம் செய்யப்படும்.

---

படியுங்கள் ! ஆனந்தப்படுங்கள் !!

## ஆரியமத தத்துவபோதினி

இதில் மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும் சுலபமாக அறிந்துகொள்ளும்படி ஸனாதனங்களாகிய ஆரியமத தத்துவங்களெல்லாம் வினு, விடை ரூபமாக உரைக்கப்பட்டிருக்கின்றன. இதைப்படித்தால் மனிதர்கள் இந்துமத தத்துவங்களையும் தர்மங்களையும் நீதிகளையும் தெரிந்துகொண்டு, ஞானத்தை யடையலாம். விலை அணு **4.**

வாவில்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்,

எஸ்பிளனேட், மதராஸ்.

---

பதினோராவது ஆண்டு

## பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

| | | | |
|---|---|---|---|
| சந்தா உள்நாட்டிற்கு ரூ. | 1 | 8 | 0 |
| வெளிநாட்டிற்கு ரூ. | 2 | 0 | 0 |




எங்கும் புகழ்பெற்ற

# A. S.

# சுகந்த மூக்குத்தூள்

இதில் ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்து உபயோகித்தால் இன்பமான சுகந்த வாசனையைத் தருவதோடு கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் கண்டிக்கும் வாங்குபவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

A. S. சுகந்த மூக்குத்தூள்.

புட்டி 1-க்கு 0—4—0
டஜன் 1-க்கு 2—4—0
சேர் 1-க்கு 3—0—0

M. J. பரிமள மூக்குத்தூள்.

சேர் 1-க்கு 1—8—0
டஜன் 1-க்கு 2—0—0

குணம்மணம்காரம்,வாடை முதலியவை.ஒருங்கேஅமையப்பெற்றது

## A. S. பட்டணம் பொடி

சேர் 1-க்கு ரூ. 0—12—0 வீசை 1-க்கு 3—4—0

தபால சார்ஜ் பிரத்யேகம். பொன் வெள்ளி மெடல்கள பெற்ற

ஏ. எஸ். மகம்மது ஷம்சுத்தீன் சாயபு,

106, தங்கசாலை வீதி, சௌகார்பேட்டை,

P. B. No. 1201, MADRAS. (B)

## குழந்தைகள்

ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும், வளரவேண்டுமானல், உலகப்ரசித்திபெற்ற,

### "பாலமித்திரா மாத்திரைகளை."

உபயோகியுங்கள். 300 மாத்திரைகள் விலை ரூ. 1—0—0 முழுவிபரங்களுக்கு எங்கள் இலவச புத்தகத்தைப் படியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ பார்மஸி,
26, பிராட்வே, மதராஸ்.

---

## பாரதம்—ஆதிபர்வம்

தமிழ் வசனம்

நல்ல உயர்ந்த கிளேஸ் பேப்பரில் ஆப்டோன் படங்களுடன் 600 பக்கங்களுக்குமேல் அச்சிடப்பட்டுள்ளது. பாரதம் படிப்பவர்களுடைய பாபத்தைப் போக்கவல்லது; காரியசித்தியை அளிக்கத்தக்க மகிமையை உடையது. சகல ஞானத்தையும் போதிக்கத் தக்கது. ஆதலால் பெரியோர் இதனை ஐந்தாம் வேதமென்றும் கூறுகின்றனர். இந்த வசனம் பிரசங்க ரத்னாகரம் வித்வான் த. சண்முகக் கவிராயர் என்பவர் எழுதியது, இந்நூலை வாசிப்பவர் பிரசங்கவன்மையை அடைவதுடன் இனிய வசனம் எழுதும் பாஷாஞானத்தையும் பெறுவார். ஆதலால் இந்த நூலை வாங்கிப் படிக்க வேண்டியது நம் தமிழ் நாட்டு ஸ்திரி புருஷர்களுடைய கடமைகளிலொன்றாகும். மற்றைய பருவங்களும் விரைவில் அச்சாகிவருகிறது.

ஆதிபர்வம் காலிகோ பயிண்டு விலை ரூபா **3-8-0.**

V. RAMASWAMY SASTRULU & SONS,
*393, Esplanade, Madras.*

---

# கக்குவானுக்கு

### ஹரி தாசர் நெய் மிகவும் கைகண்டது.

உலகப் பிரசித்திபெற்றது

இதை உபயோகித்தால் 4. 5. நாளில் சுகமாகும். மூன்று மாதம் கஷ்டப்படவேண்டியதில்லை. பத்து நாள் மருந்து கொண்ட புட்டி விலை ரூ. 1.

வி. பி. 5 அணா.

சென்னையில் 98, பிராட்வேயிலும் கிடைக்கும்.

## ஹரி தாசர் காலரா துளி

மருந்தைவிட, மிகவும் நம்பிக்கையான மருந்து காலரா, வாந்திபேதி, விஷபேதி முதலிய வியாதிகளுக்குக் கிடையாது. கைகண்டது. தவறாது. ஹரி தாசர் சித்தமருந்துகள் மிகவும் உயர்ந்தவை, கைகண்டவை. புட்டி ரூ. 1—4—0.

மருந்து கேட்லாக் இனாம்.

டாக்டர் ஹரிதாசர், B.A., L.T., M.T.S.C.,
தாசர் சித்த வைத்திய சாலை, திண்ணனூர், R.S.

---

# THE TRILINGA

### *A Papular Telugu Newspaper*

**The Best Medium for Advertisement in the Andhra Desa.**

**Subscription Rs. 2-8 per annum.**

APPLY TO:—

**V. Ramaswamy Sastrulu & Sons,**
***323, Tiruvottiyur High Road, Madras.***

தயாராய்விட்டது!  தயாராய்விட்டது!!

## திருப்புகழ் விருத்தியுரை

**552**-பக்கங்கள்  **11**-படங்கள்

கிளேஸ் பதிப்பு ரூ **6**.  வெதர்வெயிட் பதிப்பு ரூ. **8**.

இச்சிறந்த நூலில் சுவாமிமலை, பழநி, திருச்செந்தூர் ஆகிய திவ்ய ஸ்தலங்களில் எழுந்தருளியுள்ள முருகக்கடவுள்மீது, ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளிய திருப்புகழ்ப் பாடல்களும், அவற்றிற்கு பதவுரை, விருத்தியுரைகளும் கொண்டது.

விலாசம் :—

அல்லயன்ஸ் கம்பெனி,
ஷண்முக விலாசம், மயிலாப்பூர்,
சென்னை.

---

பாலர் கதாமஞ்சரி

**22** இனிய கதைகள் எளியநடையில் எழுதியது.
விலை ரூபா **2**.
கீழ்நாட்டுக் கதைகள் **15** புஸ்தகங்கள்.
விலை ரூ. **3-9-0**.
பால ராமாயண வசனம், விலை அணா 12.
(மாதவையர் பதிப்பு.)

**N. VENKATARAYALU & SON,**
*Books and Stationery Suppliers,*
*87, Ramaswamy Street, G.T. [illegible]ras.*


## ॥ क्रय्यसंस्कृतपुस्तकानि ॥

| | रू. | आ. |
|---|---|---|
| संस्कृतबालशिक्षा आन्ध्रलिप्या समलंकृता श्रीरामायणसंग्रहसहिता च संस्कृतान्ध्राक्षरजिज्ञासूनामत्युपयोगिनी | ० | ३ |
| हिन्दी तेलुगु बालशिक्षा | ० | ३ |
| ,, प्रथमवाचकम् | ० | ८ |
| संस्कृतान्ध्रवर्णबोधिनी पत्रफलका | ० | २ |
| सरस्वतीप्रार्थना, श्यामलादण्डकम्, नवरत्नमाला च | ० | २ |
| शब्दमञ्जरी, (दृढपत्रात्मिका) | ० | ६ |
| अमरकोशः | ० | ८ |
| हितोपदेशः | ० | १२ |
| रघुवंशमहाकाव्यम् सव्याख्यानम् | १ | ४ |
| मेघसन्देशः ,, | ० | ८ |
| भोजचरित्रम् | ० | ८ |
| विक्रमार्कचरित्रम् | ० | १० |
| व्रतरत्नाकरः | १ | ८ |
| महाकविबोधायनकृत भगवदज्जुकनाटकम् | ० | ६ |
| अभिज्ञानशाकुन्तलनाटकम् | .... | |
| भर्तृहरिशतकत्रयम्, मूलम् | ० | ८ |
| बालरामायणम् | ० | २ |
| विवेकचूडामणिः | ० | ८ |
| रामकर्णामृतम् | ० | ८ |
| श्रीकृष्णकर्णामृतम् | ० | ६ |
| ,, आंग्लानुवादसहितम् | १ | ८ |

| | | |
|---|---|---|
| शिवकवचम् | ० | २ |
| शिवानन्दलहरी | ० | २ |
| आदित्यहृदयम् | ० | १ |
| श्रीगोविन्दद्वादश (चतुर्दश) मञ्जरिकास्तोत्रम् | ० | १ |
| श्रीलक्ष्मीनारायणहृदयम् | ० | ३ |
| पञ्चसूक्तानि | ० | २ |
| रुद्रनमकचमकम् | ० | २ |
| यजुर्वेदसन्ध्यावन्दनम् | ० | २ |
| यजुर्वेदाह्निकम् | ० | २ |
| श्रीवैष्णवाह्निकम् | ० | ६ |
| सूर्यनमस्कारमन्त्राः त्र्युचब्रह्मयज्ञसहितास्सस्वराश्च | ० | १ |
| श्रीदक्षिणामूर्तिस्तोत्रम् | ० | १ |
| आळवन्दारस्तोत्रम् | ० | १ |
| सौन्दर्यलहरीस्तोत्रम् | ० | २ |
| लक्ष्मीनृसिंहस्तोत्रम् | ० | १ |
| देवीस्तोत्रकदम्बः | ० | ६ |
| मुकुन्दमाला | ० | १ |
| बृहत्स्तोत्ररत्नाकरे प्रथमभागः | २ | ० |
| बृहत्स्तोत्ररत्नाकरः (द्वितीयभागः) | २ | ० |
| श्रीमद्रामायणे बालकाण्डः | १ | ० |
| ,, अयोध्याकाण्डः | १ | १२ |
| ,, आरण्यकाण्डः | १ | ० |
| ,, किष्किन्धाकाण्डः | १ | ० |
| ,, सुन्दरकाण्डः | १ | ० |
| ,, युद्धकाण्डः | २ | ० |



| | | | |
|---|---|---|---|
| गद्यत्रयम् | | ० | ३ |
| ब्रह्मसूत्राणि, मूलमात्रम् | | ० | २ |
| भगवद्गीता मूलमात्रम् | | ० | ४ |
| विष्णुसहस्रनामस्तोत्रम् (नामावळीसहितम्) | | ० | ४ |
| ललितासहस्रनामस्तोत्रम् | ,, | ० | ६ |
| लक्ष्मीसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| सुब्रह्मण्यसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| शिवसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| वेङ्कटेशसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| अन्नपूर्णासहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| आंजनेयसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| गणपतिसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| श्रीरामसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| श्रीकृष्णसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| श्रीगोपालसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| श्रीलक्ष्मीनृसिंहसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| श्रीवटुकभैरवसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| श्रीभवानीसहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |
| श्रीकालिकासहस्रनामस्तोत्रम् | ,, | ० | ४ |

वाविळ्ळ रामस्वामिशास्त्रुलु अण्ड् सन्स्,

२९२, एस्प्लनेड्, मद्रास्.

## ॥ विक्रमार्कचरित्रम् ॥

भो महाशयाः, अस्मन्मुद्रणशालायामिदानीं देवनागरलिप्यामपि ग्रन्थाः मुद्राप्यन्ते इति विदितचरमेव तत्रभवतां भवताम् ॥

सुप्रसिद्धेषु गद्यग्रन्थेषु संस्कृतभाषाप्रविविक्षूणां विक्रमार्कचरित्रम्, भोजचरित्रमित्युभावेव सुगमौ ॥ दाक्षिणात्यपाठानुसारेण मुम्बापुर्यादिपत्तनेषु मुद्रितयोरनयोः पुस्तकयोरभावादिदानीं विक्रमार्कचरित्रं दाक्षिणात्यपाठानुसारेणान्ध्रलिप्यां ग्रन्थलिप्यां च मुद्रितकोशैः समीकृत्य स्फुटैरायसाक्षरैः दृढचिक्कणपत्रेषु संमुद्र्य विक्रेयमस्ति । आंग्लपाठशालापठितॄणां माणवकानामुपकाराय, आंग्लानुवादसहिता, अकाराद्यनुक्रमणिका (Glossary) संयोजितास्ति। पाठशालाध्यापकाः सर्वेऽपि माणवकानेतत्पुस्तकक्रयणाय प्रोत्साह्य एतादृशग्रन्थमुद्रणाय प्रोत्साहयेयुरस्मानिति प्रार्थयामहे ॥

क्रय रू. ०—१०—०.

---

## ॥ अभिज्ञानशाकुन्तलं नाम नाटकम् ॥

भोभोस्सचेतसः आधुनिकी किल काचन विज्ञापना,

इदं किल राघवभट्टकृतव्याख्यया, श्रीनिवासाचार्यरचितव्याख्यया च सहितं दाक्षिणात्यौत्तरिकपाठभेदादिसङ्कलितं सहृदयहृदयाह्लादनचातुरीधुरीणरसालङ्कारादिपरिष्कृतं च नाटकं स्फुटतरदेवनागरलिप्या मुद्राप्यमाणं सदचिरादेवास्मन्मुद्रणालये प्रचाराय भविष्यतीति ॥

इत्थं भवद्विधेयाः

वाविळ्ळ रामस्वामिशास्त्रुलु अण्ड् सन्स्.



அம்மா, நான் திருடிப் பொருள்கொண்டு வந்த போது என்னைக் கண்டித்தடக்கி யிருந்தால் இந்தத் துன்பம் எனக்கு நேரிட்டிராது. அப்பொழுது மகிழ்ந்தீர்கள். அந்த மகிழ்ச்சி என்னைக் கொலைகாரனுக்கி இராஜதண்டனைக்குள்ளாக்கியது ; உம்மை என்னைப்பார்த்து அழும்படி செய்தது. என்ன செய்யலாம். தவறு உம்முடையதே.

210773

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 11 | 1929௵ ஏப்ரல் மாதம் | பகுதி 4

### தெய்வ வணக்கம்

நதியெங்கு மூழ்கித் தலந்தோறும் சுற்றியும்
நல்லநிய மங்கள்செய்தும்
நாமென்ற ஆணவம் தள்ளினே மென்றறிவ
ஞானங்கள் பலபேசியும்
கதிகொண்ட மவுனியாய் அஷ்டமா சித்தியொடு
கற்பந்தனைப் புசித்தும்
கண்ணிறுக மூடிச் சிவானந்த மென்றசெயல்
கண்டிருந் தோமென்னவும்
எதிரொருவர்க்கொருவர் தர்க்கித்து மற்கட்டி
இப்படி யனந்தகோடி
இதுவல்ல அதுவல்ல என்றுபோ ராவேதும்
என்னவகையோ அறிகிலேன்
சதமென்ன உன்னைநான் நம்பினேன் நம்பினேன்
சரசகோ பாலன்மருகா
சதுர்மறைக ளோதந்த பரமகுரு வாய்வந்த
சரவணப வானந்தனே. (சுப்ரமண்யதேசிகர்)

210773

## ஹிதோபதேசம்

(1) வித்வானை வயதிலே சிறியவனாய் இருந்தபோதிலும் அவனை வந்தனபூர்வமாக வரவேற்று அவன் விருப்பமறிந்து உதவி ஆதரிக்கவேண்டும். எந்த இராஜ்யத்தில் வித்வான்கள் சந்தோஷ மடைகின்றனரோ அந்த ராஜ்யத்தில் சகல சம்பத்துகளும் குறைவற அமையும். (பாரதம்).

(2) தவம்புரிபவன் யார்? தபோதனர் யார்? தத்தம் கடமைகளைத் தவறாமல் செய்பவரே தவம்புரிபவர்; தபோதனர்; தாய் தந்தையரையும் தாரத்தையும் தனயரையும் திண்டாடவிட்டுக் காட்டிற்கேகித் தம் மனம்போனபடி சஞ்சரிப்பவரல்லர். அவர்கள் அவம் புரிபவரேயாவர். இதுபோல் தற்காலத்தில், சிலர் தங்கள் குடும்பம் குலைந்து சீர்கெட்டலைய விட்டுவிட்டுத் தேசத்தொண்டு புரிவதாகக் கூறிக் கதராடை புனைந்து கண்ட இடத்திற் சோறுண்டு காளைபோல் கவலையற்றுத் திரிகின்றனர். இவர்கள் தேசத்தொண்டராவரோ? தேசத் துரோகிகளேயாவர்.

(3) சமூகசேவை புரிபவன் மனித உருவங்கொண்ட தேவனாவன் என்று சாஸ்திரம் போதிக்கின்றது. உண்மையில் அவன் அப்படிப்பட்ட உயர்வுக்குரியவனென்பதை யாவரும் மறுப்பதற்கில்லை. அவன், "தான் சமூகசேவை செய்பவன் என்று பிறர் மயங்கக் கதர்ப்போர்வையை மாத்திரம் போர்த்துக்கொண்டு எழைகளிடத்தில் வசூலிக்கப்படும் பணத்திற் பங்கு பெற்றுத் தின்று கொழுப்பவனாயிருந்தால், அவனை அறிஞர்கள் காரி யுமிழ்ந்து காலாலுதைத்துச் சீயென வெறுத்துச் சாபமிடுவாரல்லவா? அப்படிப்பட்ட சமூகசேவகர்கள் பெருகாமலிருக்க எல்லாம்வல்ல இறைவன் கருணைபுரிவானாக.

(4) உலகம் என்பது உயர்ந்தவர்களையே குறிப்பிடுவதாகும். உயர்ந்தோர் தொன்றுதொட்டு அநுஷ்டித்துவரும் ஆசாரமே சிஷ்டாசாரமாகும். வேதங்களையும், தர்மசாஸ்திரங்களையும், தர்மஸூக்ஷ்மங்களையும் அறிந்தவர்களே உயர்ந்தோ



ராவர். உயர்ந்தவர்களாகிய இவர்களுக்கு, கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, பிரமசரியம், வைராக்யம் ஆகிய இவைகளே நியமங்கள். தூய்மை, தெய்வபக்தி, ஞானம், திருப்தி ஆகிய இவைகளே விரதங்கள்.

(5) தர்மம் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பது. தூய்மை, திருப்தி, தெய்வபக்தி, ஞானம் இவை தர்மத்திற்குக் காவல்கள். தர்மம் என்ற பதத்திற்குப் பொருள் தரிப்பது அதாவது எல்லாவற்றிற்கும் ஆதரமாயிருப்பதாம். இதற்கு, விடாமல் கூட இருப்பது என்றும் பொருள்கொள்ளலாம். தர்மமே நம்மைத் தொடர்ந்து இனிய பயனை நமக்குக் கொடுக்கும். ஆகையினாலேதான் ஔவையார் "அறஞ்செய விரும்பு" என்று ஆக்ஞையிட்டார்.

(6) வித்தையை உபதேசித்த குருவைப் பூஜிக்கவேண்டும். அப்படிப் பூஜியாதவன் பாபலோகத்திற்கு ஓர் ஆளாய் அல்லல் பல அடைவான். குருவைப் பூஜிப்பவன் தன் குருவாகிய துரோணாசாரியரின் வழிபாட்டில் எல்லோரினும் சிறந்திருந்த அர்ஜுனனைப்போல் சகலமேன்மைகளையும் அடைவான். மானிடனாகிய அர்ஜுனன் அருந்தவம் புரிந்து பரமசிவனிடம் பாசுபதாஸ்திரம் பெற்றிருக்கிறான்; ஸ்வர்க்கலோகம் போய் இந்திரனுடைய ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்து கிரீடி என்கிற பட்டம் பெற்றிருக்கிறான். இன்னும் பலவுண்டு அவனடைந்த பெருமை யாவும் அவனுக்கு குருகடாட்சத்தினால் ஏற்பட்டனவென்று பெரியார் கூறுகின்றனர்.

(7) எவன் சுத்தவீரன்? பிறர் கூறும் நிந்தைமொழிகளைப் பொறுப்பவனே சுத்தவீரன். பொறுமையைத் தன்னைக் காக்கும் கவசமாகக் கொண்டவன், பாம்பு பழையசட்டையை உரிப்பதுபோல் தன் அடிமைத்தனத்தை நீக்கிக்கொள்வான். பல சொல்வானேன்; கடவுளின் திருவருள் அவன் பங்கே இருக்கும்.

# உற்றதுரைக்கில் அற்றது பொருந்தும்

"உற்றதுரைக்கில் அற்றது பொருந்தும்" என்று ஒரு பழமொழி வழங்குகிறது. இதனைக் கவனிப்போம். இது, மனத்திலுள்ளதைச் சொன்னால், கைவிட்டுப் போனது கைகூடும் என்றுவது, மனத்திலுள்ளதைச் சொன்னால் நிறைவேறப்பெறாமல் சங்கடத்துக்குள்ளாக்கி வருத்துமொரு செய்கையோ, அல்லது கோரிக்கையோ, நிறைவேறப்பெற்றுச் சுகமுறலாமென்றுவது, பொருள் கொள்ளத் தக்கது. இதுபற்றிப் பாரதத்தில் ஒரு கதையுண்டு—

பாண்டவர்கள் வனவாசம் செய்யும்போது அர்ஜுனன் திரௌபதியுடன் ஒரு வனத்தில் தனித்திருந்து அவ்வனவிநோதங்களை மனைவிக்குக் காட்டித் தானும் கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தான். அங்கே ஒரு நெல்லி மரத்தில் ஒரே கனி ஒரு கொம்பிலிருக்கக் கண்ட பாஞ்சாலி அர்ஜுனனைப் பார்த்து, "இந்தக் கனியைப் பறித்துத் தாருங்கள்" என்று கேட்டாள். அர்ஜுனன் உடனே, மரக்கொம்பை வளைத்து அக்கனியைப் பறித்துக் கொடுத்தான். அப்படி அர்ஜுனன் அக்கனியைப் பறித்துக் கொடுத்ததைக் கண்ட ஒரு ரிஷி அர்ஜுனனிடம் வந்து, "அடடா! என்ன காரியம் செய்தாய்? பெரும்பழி தேடிக்கொண்டாயே! பெருஞ்சாபத்துக்



காளாயினையே! அந்தோ இனி என்ன செய்வது?" என்றார்.

இதைக் கேட்டதும் அவன் அச்சங்கொண்டு, "ஸ்வாமி, நான் என்ன தவறு செய்தேன்! எப்படி அபராதியானேன்?" என்றான். ரிஷி, "நீ இப்போது இந்த மரத்திலிருந்து கனியைப் பறித்துத் தந்தாயல்லவா? இதனால் வந்தது விபத்துனக்கு" என்றார்.

அர்ஜுனன் "ஸ்வாமி, இந்தக் கனியைப் பறித்தால் இது எப்படி அபராதமாகும்? இது எப்படி விபத்தை யுண்டாக்கும்?" என்று கேட்டான்.

ரிஷி "இராஜகுமாரனே, இந்தக் கனி எமக்குச் சொந்தமானதல்ல. இந்த வனத்திலே தவம்புரிந்து வரும் மித்திரமகரிஷிக் குரியது. அந்த உத்தமர் பிரதி தினம் ஒரு வேளை இம்மரத்தடிக்கு வந்து உட்கார்ந்து, எங்களுக்குத் தவம், தருமநீதிகள் யாவும் சொல்லிப் போவார். இந்த மரம் ஆறு வருஷத்திற் கொருமுறை ஒரே காய் காய்க்கும். காய்தோன்றியதும் இரண்டு வருஷம் பிஞ்சாகவே இருக்கும். இரண்டு வருஷம் காயாகவே இருக்கும். அப்பால் இரண்டு வருஷம் செங்காயாயிருந்து பின் பழுக்கும். மகரிஷி எமக்கு உபதேசிக்கும் தருணத்தில் அந்தக் கனி தானே வந்திறங்கும். மகரிஷி அக்கனியை கைலாசவாசனாகிய பரமசிவனுக்கு நிவேதித்து, தம்மினத்தவராகிய தவசிகளுடனிருந்து அதனைப் புசித்து மகிழ்வர். நீ பறித்த இக்

கனி அம்மகரிஷிக்கு நாளைக் காலமே உதவியாகக்கூடியது. இதை நீ பறித்துவிட்டாய்! இது அபசாரமல்லவா?" என்றார்.

அர்ஜுனன் கேட்டதும் வருத்தமுற்றுத் தருமராஜனிடம் சென்று நடந்ததைச் சொல்லிக் கலங்கினான். கலங்காநெஞ்சம் படைத்தவனாகிய காண்டீபன் கலங்கவே, தருமராஜனும் மனம் கலங்கி, "மகரிஷிக்கு அபராதம் செய்த நாம் இனித் தப்புவதெப்படி?" என்று கூறிப் பெருமூச்செறிந்தார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த சகாதேவன், "அண்ணா, ஏன் கலங்குகிறீர்கள்? கலங்குவது யார்? தெய்வபலமற்றவர்களும் அறிவீனர்களுமல்லவா? ஆபத் சகாயனாகிய கிருஷ்ணபகவானை நம்பி அவன் துணைகொண்ட நாம் ஏன் கவலைப்படவேண்டும்? அந்தக் கருணாநிதி இவ்விடம் வரும்படி நாம் நினைக்கவேண்டும். அடியாருடைய மனக்கிலேசத்தை நீக்குகிறவராகிய அவர் வருவாரானால் நமது இந்த ஆபத்து நீங்கும்" என்றான்.

பிறகு தருமர் முதலிய யாவரும் மனமகிழ்ச்சியுடன் பகவானை நினைத்துத் துதித்தார்கள். எல்லாமறிய வல்லவராகிய பகவான், தம்மைப் பாண்டவர்கள் நினைப்பதை அறிந்து துவாரகையிலிருந்து ஸத்யபாமையுடன் புறப்பட்டுப் பாண்டவர்களிருக்கும் வனத்துக்கு வந்து சேர்ந்தார். பாண்டவர்கள் கிருஷ்ண



மூர்த்தியை முறைப்படி உபசாரத்துடன் வரவேற்றுத் தங்கள் குறையைச் சொல்லிக்கொண்டனர்.

கிருஷ்ணமூர்த்தி அதைக் கேட்டதும், "ஒரு காரியம் செய்வோம். "உற்றது பகர்ந்தால் அற்றது பொருந்தும், என்று சொல்வதுண்டு. ஆகையினால் நாம் எல்லோரும் அந்த மரத்தினடிக்குப் போவோம். அங்கே நீங்கள் ஐவரும் உங்கள் மனத்திலுள்ள நிச்சயத்தைக் கூறுங்கள். எப்படியும் இது பொருந்தும். 'ஜனவாக்கியம் கர்த்தவ்யம்' என்பது பொய்பாகாது" என்று கூறி அவர்களை அழைத்துக்கொண்டு மரத்தினடிக்குப் போய் அப்பழத்தை வாங்கித் தமது கரத்தில் வைத்துக்கொண்டு "ஓ ஆகாயவாணி! ஓ பூமிதேவி! ஓ வனதேவதேவ! ஓ வேதமுதல்வனே! இந்தப் பாண்டவர்கள் சொல்லும் உண்மை வசனத்தினாற் பழமானது மரத்தில் முன்போல் பொருந்தக்கடவது" என்று கூறிப் பழத்தைத் தருமராஜனுடைய கரத்திலே கொடுத்தார். அதையவர் வணக்கத்துடன் வாங்கி, வழிபடுகடவுளைத் தியானம் செய்து—

வெல்லுக அறமும் மெய்ம்மையும் பொறையும்
　　மேகமேனியனும் வெல்லாமற்
செல்லுக பாபம் பொய்மொழி கோபம்
　　தெயித்தியர் குலமெனத் தெளிவுற்
றல்லுநண் பகலும் என்மன நிகழும்
　　அலைகையா மன்னையை முன்னம்
கொல்லுதல் புரிந்தோய்...........

அதாவது ஆதியில் வஞ்சக மாதாவாய் வந்த பூதகியைப் பாலைக்குடிப்பதுபோல் அவள் பிராணனைக் குடித்துக் கொல்லுந்தொழில் புரிந்த கோவே, என்றழைத்துத் தருமமும் சத்தியமும் பொறுமையும் நீலமேகவண்ணனாகிய நீரும் நித்தியமாக என்னிடத்தில் நீங்காமல் நீடூழி நிலைபெறக்கடவன. பாவமும் பொய்மொழியும் கோபமும் இராக்ஷஸ குலங்களைப்போல் நசித்துப்போகக்கடவன என்று தெரிந்து என்னுள்ளமானது இரவும் பகலும் இதுவே வேலையாக நடந்து கொண்டிருக்கிறது எனக் கூறினார்.

இப்படி உறுதி கூறியவுடனே, தருமராஜனுடைய அகங்கையிலிருந்த ஆமலகம் இரண்டு முழம் உயர்ந்தது. அதைக் கண்டு யாவரும் மகிழ்ந்தனர்.

அப்பால் பீமசேனன் முன் வந்து எல்லோரையும் வணங்கி,

பிறர் மனையவரைப் பெற்றதா யெனவும்
பிறர்பொருள் எட்டியே எனவும்
பிறர்வசை யுரைத்தல் பெருமை யன்றெனவும்
பிறர்துய ரென்றுய ரெனவும்
இறுதியே வரினும் என்மனக் கிடக்கை
எம்பிரா னிவையென உரைத்தான்—

அதாவது—அன்னியருடைய மனைவியைக் கண்டால் என்னைப் பெற்ற தாயெனவும் பிறருடைய பொருள்களைக் காணில் எட்டிப் பழமெனவும் ஒருவரை யொருவர் வசைமொழிந்து புறங்கூறுதல் பெரு



மையல்ல வெனவும் வேறொருவர் வருந்தும்படி நேரிடும் துயரம் எனக்கு வந்த துயரமெனவும் என்னும் எண்ணம் எனக்கு இறுதிவந்து போங்காலம் நேரிடும் சமயத்தும் என் மனத்தைவிட்டு நீங்காதிருக்கும்—என்றான்.

இப்படிக் கூறியதும் பழம் இன்னொரு முழம் உயரச் சென்றது.

அடுத்தாற்போல் அர்ஜுனன் முன் வந்து வணங்கி—

ஊனமே யான உயிருட னிருக்கும்
உயிரினைத் துறந்துமொண் பூண
மானமே புரப்ப தவனிமே லவர்க்கும்
வரிசையுர் தோற்றமு மரபு
ஞானமே யான திருவடி யுடையாய்
ஞாலமுன் ளளவு நிற்றலினால்
ஈனமே யுயிருக் கியற்கை யாதலனா லென்றனன்—

அதாவது "மெய்ஞ்ஞான உருவாகிய திருவடிகளை உடைய விமலனே! மாமிசம், ரத்தம், சீழ் நரம்பு, எலும்பு, தோல் இவைகளோடு கூடி நீர்க்குமிழிபோல் அழியும் உடலிற்பொருந்திய ஆத்மாவை இழந்தாகிலும், ஒழுக்கமுடைமையும் மதிப்பாகிய ஸத்திய மொழியும் நல்ல குடிப்பிறப்பும் பூலோக முள்ளவரையில் நிலைபெற்றிருப்பதனால் இவற்றைப் பொருளாய்ப் பெறவேண்டும். அப்படி அவற்றைப் பெறாமல் மனிததேக மெடுத்து விறுதாவில் இறப்பது ஆத்மா

வுக்கு ஈனம். ஆகையால் புருடராய் ஜனனமெடுத்த பேர்கள் மெய்ஞ்ஞானபோதத்தை அறியவேண்டும்; அல்லது யுத்தசங்க்ராம வீரனாகவேண்டும் என்பது கடைப்பிடி. 'என்னையாவது என் வில்லையாவது என் தமையனையாவது பழித்தவர்களையும் என்னோடு எதிர்த்தவர்களையும் கொன்று வெற்றித்துவஜம் நாட்டுவதே எனக்கு மேம்பாடாகிய கீர்த்தி' என்கிற எண்ணங் கொண்டிருக்கிறது என் இதயம் என்றான்." அதுகாலையில் கனியானது பின்னும் இரண்டுமுழம் உயர்ந்தது.

அப்பால் நகுலன் முன்வந்து வணங்கி,
குலமிக வுடையர் எழின்மிக வுடையர்
குறைவில் செல்வமு மிகவுடையர்
நலமிக வுடையர் என்னினுங் கல்வி
ஞான மற்பமு மிலாதாரை
வலமிகு திகிரிச் செங்கையாய் முருக்கின்
மணமிலா மலரென மதிப்பேன்—

அதாவது, "மேலாகிய குலத்திற் பிறந்தோர்களானாலும், நல்ல அழகுகளெல்லாம் உடையவர்களானாலும், அழியாச்செல்வத்தை அதிகம் பெற்றவர்களானாலும், சகல நலங்களையும் உடையவர்களானாலும் கல்வியும் அந்தக் கல்விக்குத் தகுந்த ஞானமும் அற்பமேனுமில்லாதபேர்களைச் சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்தில் வாசனையற்ற முருக்கம் பூப்போல் மதிப்பதேயன்றி அவர்களைத் துதிக்கேன்" என்றான். அந்தப் பழமானது பின்னும் இரண்டுமுழம் உயர்ந்து நின்றது.



அப்பால சகாதேவன் முன்வந்து வணங்கி,
ஒருமொழி யன்னை வரம்பிலா ஞான
முற்பவ காரண னென்றும்
தருமமே துணைவன் கருணையே தோழன்
சாந்தமே நலனுறு தாரம்
அரியதிண் பொறையே மைந்தன் மற்றிந்த
அறுவரு மல்ல தாருறவெண்
டிருவளர் மார்பா—என்றனன்.

அதாவது "அஷ்ட லக்ஷ்மிகள் குடிகொண்டு வளரும் அழகிய மணிமார்பா! ஸத்தியமே தாய், அளவுபடாத ஞானமே தந்தை, என்னும் தருமமே சகோதரன், கருணையே தோழன், சாந்தமே நற்செய்கைகளையுடைய மனைவி, பொறுமையே மைந்தன் இவ்வறுவரைத் தவிர எனக்கு வேறு துணையில்லை" என்றான். உடனே அக்கனி முன்னிருந்த கிளையினிடத்தில் ஒட்டிக்கொண்டது.

உடனே எல்லோரும் அதிசயித்தனர். அப்போது கிருஷ்ணபகவான், "பாண்டவர்களே! உண்மையுரைக்கில் உண்மை பலிக்கும். நன்மை பகரில் நன்மை உண்டாம். ஆதலால் 'உற்ற துரைக்கில் அற்றது பொருந்தும்' என்று பெரியார் கூறினர். அது பலித்தது பாருங்கள். பெரியோர் வாக்கு வீண்போவதில்லை. புத்திசாலிகள் பெரியோர்வாக்கை அநுசரித்தே நடப்பார்கள்; அவர்களைத் தெய்வமாகவே கொள்வார்கள். நீங்களும் அம்முறையையே அநுசரிப்பவர்கள். அதனாலே தான் உங்களுக்கு நேரிடும் ஆபத்துக்களெல்லாம் பகலவன்முன் பனிபோல் நீங்குகின்றன" என்று கூறித் துவாரகை சென்றார்.

## ஸ்ரீமகாலக்ஷ்மிக்கும் பார்வதிக்கும் தர்க்கம்

### காப்பு.

தேவி யுமையவளும் செல்வி இலக்குமியும்
தாவிச் செயுந்தர்க்கந் தன்னையே—ஆவலுடன்
வையமிசை சொல்ல வளரங் குசபாசக்
கையனிரு சரணங் காப்பு.

இராகம்—நாதநாமக்ரியை

ஜம்பை தாளம்

திருமாரன்[1] என்னபிழை செய்தானென் றெரித்தவனை
உருமாறச் செய்ததென்ன உன்கணவ னுமையே.

செயத்திரதன் தனக்காகச் செங்கதிரை[2] மறைத்தவனை
[3]உயிர்க் கோறல் செய்ததென்ன உன்கணவன் திருவே.

பிட்டுக்கா மண்சுமந்து பிரம்பினால் முதுகிலடி
பட்டோடிப் போனதென்ன பகருவாய் உமையே.

கல்லுரலிலே பிடித்துக் கட்டி இடைச்சிய ரடிக்க
[4]அல்லல்பட்ட தறியாயோ அர்விந்தத்[5] திருவே.

பாலுஞ் சீனியொடு பாயசமெல் லாமிருக்க
[6]ஆலமுண்ட துன்கணவன் அறியாயோ உமையே.

உண்ணத்தகுஞ் சோறுகறி ஊரெங்கு மிருக்கவன்று
[7]மண்ணையுண்ட வாறதனை மறந்தாயோ திருவே.

பொன்பணிதி யொரெத்ந பூஷணங்கள் பலவிருக்க
[8]என்பணிந்த தென்னகுறை[9] இயம்புவா யுமையே.

வளமிகுத்த பவளமுத்து மாலைபல இருக்கவனத்
துளசித்தழை யணிந்ததென்ன சொல்லுவாய் திருவே.

காளியுடன் வாதாடிக் கால்தூக்கி யாடிநின்ற
[10]கோனென்ன எனக்கறியக் கூறுவாய் உமையே.

---

(1) மன்மதன், (2) சூரியனை, (3) சாகடித்தல், (4) துன்பம், (5) தாமரை, (6) கடலிலெழுந்த ஆலாலவிஷம், (7) பூமியை, (8) எலும்பு, (9) சொல்லு, 10) காரணம்.

## மீன்களின் சம்பாஷணை

முதல் மீன்:—நண்பா, நீ ஏன் என்னுடன் விளையாட வருகிறதில்லை? உன் தாயார் விளையாடப் போக வேண்டாமென்று சொல்லுகிறாளோ?

இரண்டாவது மீன்:—சிநேகா, என் தாயார்பேரில் பழிபோடாதே; வெளியே வருவதாலுண்டாகும் விபத்துகளை நீ அறியாயோ?

மு. மீன்:—நான் அறியேன். நாம் யாருக்குந் தெரியாமல் தண்ணீர்க்குள் ளிருக்கிறோம். சண்டையிடும் சுவாபம் நமக்கில்லை, விபத்துகள் எப்படி நேரிடும்?

இர. மீன்:—சத்துருக்கள் உண்டாவதற்கும், விபத்துகள் நேரிடுவதற்கும், நம்முடைய பிரயத்தினம் வேண்டுமென்பதில்லை.

மு. மீன்:—நாம் கெடுதல் செய்யாதிருக்கப், பிறர் நமக்குக் கெடுதல் செய்ய இசைவார்களா என்பது சந்தேகம். அப்படிப்பட்ட பரம துஷ்டர்களும் உலகிலிருக்கிறார்களா?

இர.. மீன்:—ஆம்! இருக்கின்றனர். பூமியிலும் ஆகாயத்திலும் நமக்கு அநேக சத்துருக்க ளிருக்கின்றனர். அவர்கள் தங்கள் வயிற்றை நிரப்புவதற்காக நம்மைப் பிடித்துக் கொல்லுகின்றனர். மனிதருடைய

வயிறுதான் நமக்குச் சுடுகாடாய் இருக்கிறது. அவர்களது (வயிற்றில் நாம் பட்சணமாய்ப் போகிறோம். பாவிகளாகிய மனிதர்கள் நம்மைப்பிடிக்கப் பல தந்திரங்கள் செய்கின்றனர்.

மு. மீன்:—நண்பா! அவர்கள் செய்யும் தந்திரங்களென்ன? ஆகாயத்திலுள்ள சத்துருக்கள் யார்?

இர. மீன்:—சிநேகா! மனிதர் ஒரு தூண்டிலில் உணவை வைத்து அதை ஜலத்தி லெறிந்து கண் குத்திப் பாம்பைப் போல் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். நாம் அந்த வஞ்சனையை அறியாமல் உணவைத் தின்னவந்து அகப்பட்டுக் கொள்ளுகிறோம். தூண்டில் அசைகிறது. தட்சணமே அதைத் தூக்கி நம்மை யெடுத்துப் பறியில் போட்டுக் கொள்ளுகின்றனர். இது ஒரு தந்திரம்; ஜலத்திலிறங்கி வலையை வீசிப் பிடிப்பது இன்னொரு தந்திரம். நம்மெல்லோரையும் ஒரே தடவையில் பிடிக்க வெண்ணித் தட்டியாலாகிய வலையை ஆற்றின் குறுக்கில் வைத்து இரண்டு பக்கத்திலிருந்தும் நெருக்கி வருவது மூன்றாவது தந்திரம். இவ்வாறு அநேக தந்திரங்களிருக்கின்றன. ஆகாயத்திலோ பறவைகள் நமக்குச் சத்துருக்களா யிருக்கின்றன; மீன் குத்திப்பறவை ஜலத்துக்கு நேரே அந்தரத்தில் பறந்து நமது வருகையை எதிர் பார்த்துக் கொண்டே இருந்து, நாம் வந்தவுடன் சரேலென்று கீழே இறங்கி ஜலத்தில் மூழ்கித் தன் கூறிய மூக்கினாற் பிடித்துக்கொண்டு போகிறது. இந்தப் பறவையின்



கண்ணுக்கு, வெகு தூரத்திலிருக்கும் நம்மைப் பார்க்கும்படியான சக்தியைப் பகவான் கொடுத்திருக்கிறார். மேற் கூறிய துராத்மாக்கள் நிரபராதிகளான நம்மை ஹிம்சிக்கின்றனர்.

மு. மீன்:—நமது சத்துருக்களை இப்போதே அறிந்தேன். பறவையாகிலும் பகுத்தறிவற்றது. பகுத்தறிவையுடைய மனிதன் நம்மை வதைப்பது புத்தியீன மன்றோ?

இ. மீன்:—அந்த வெட்கக்கேட்டை நான் என்னவென்று சொல்லுவேன்! மனிதன் தன்னை மகா விவேகி என்று சொல்லிக்கொள்ளுகிறான். அவனிடமுள்ள அயோக்கியத்தனத்துக்கு அளவில்லை, பூமியில் வாழும் ஆடுமாடுகள், உடும்பு, பன்றி, கோழி, வாத்து, முயல் முதலிய மிருகங்களைப் பட்சித்து அவைகள் போதாமல் ஆகாயத்தில் பறக்கும் பட்சிகளைக் கவண் கல்லால் எறிந்தும் துப்பாக்கியாற் சுட்டும் கொன்று தின்கிறான்; அவைகளும் போதாமல் ஜலத்திலுள்ள மீன், ஆமை, நண்டு முதலியவற்றைக் கையாலும் வலை போட்டும் பிடித்துத் தின்று வயிற்றை நிரப்புகிறான். ஐயோ! மனிதன் என்னும் பரம துஷ்டப் பிராணிக்குப் பயந்து நாம் எங்கே போனாலும், அவன் நம்மை விடுகிறதில்லை. நாட்டைவிட்டுக் காட்டிற்கு ஓடினால், அங்கே, கொம்பு, தப்பட்டையுடன் வேட்டையாட வருகிறான். ஆதலின் மனிதர் கண்ணிற் படும்படி

210773

வெளியே போகாதே யென்று என் தாய் எனக்கு உத்தரவு செய்திருக்கிறான்.

மு. மீன்:—அப்பப்பா! மனிதர்கள் நடத்தையை நீ சொல்லச் சொல்ல பயங்கரமாயிருக்கிறதே! அவர்கள் அவ்வளவு துஷ்டர்களா?

இ. மீன்:—அதிலும் சந்தேகமா! நமக்கு மாத்திரம் மனிதர் சத்துருக்களென்று எண்ணவேண்டாம். அவர்களே ஒருவரை ஒருவர் விரோதித்துச் செய்யும் மோசம் அநந்தம்.

மு. மீன்:—நண்பா! மனிதர் செய்யும் மோசத்திற் சிலவற்றைச் சொல் கேட்கலாம்.

இ. மீன்:—தாய், தந்தை, குரு, தெய்வம், ராஜன் ஆகிய ஐவரிடமும் வேண்டிய நன்மைகளைப் பெற்று, பின் அவர்களுக்கு துரோகிகளாகும் மனிதர்களைப் பற்றி நானென்னவென்று சொல்லுவேன்! இந்த துரோகிகளுக்குக் கூறி யிருக்கும் நரகமோ கொடியது. ஆயினும் அவர்கள் தற்கால வரும்படியை உத்தேசித்து தங்கள் எஜமானுக்குத் துரோகம் செய்கின்றனர். எந்த வேளையில் எவன் மோசம்போவானென்று சமயம் பார்த்துக்கொண்டிருப்பவர் சிலர்; கபந்தனைப்போல இரண்டு கையாலும், ஊரிலுள்ள சகல வியாபாரங்களையும் தாமே நடத்த வெண்ணி எல்லோருக்குக் தீங்கு விளைப்பவர் சிலர்; காரியம் ஆகும் வரையில் கழுதையின் காலைப்பிடி யென்னும் பழமொழிப்படி தங்கள்



கௌரவத்தை இழந்து அற்பர்கள் வீட்டிற்கும் சென்று காரியசாதகம் செய்வோர் சிலர்; இவ்வாறாக துஷ்டர்கள் நிறைந்திருப்பதால்தான் பெரியோர் நகரங்களை விட்டு ஏகாந்தமான இடங்களுக்குச் செல்கின்றனர். துறவிகள் மடங்களில் ஒதுங்கிக் கொள்ளுகின்றனர். தேவர்கள் மனிதருக்குப் பயந்தே கண் மறைவாகத் தேவலோகத்தில வசிக்கின்றனர். சித்தர்கள் எவருக்கும் தெரியாமல் சூட்சும சரீரிகளாய் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றனர்; தெய்வங்களெல்லாம் கோயில்களில் ஒளிந்து காலந்தள்ளுகின்றன. விஷ்ணு தாம் சாபபிடும்போது திரை போட்டுக்கொள்வது ஏன் தெரியுமா ஒரு வேளை மனிதன் சாப்பாட்டைப் பிடுங்கித் தன் வாயில் கொட்டிக் கொள்வானோ என்னும் சந்தேகம் திருமாலுக் குண்டு; பரமசிவனோ தமக்கு நிவேதனம் செய்த ஆகாரத்தைப் பிறர் உட்கொள்ளக் கூடாதென்று பயமுறுத்தி யிருக்கிறார். இவ்வாறு துஷ்டர்களைக் கண்டு தேவர்களும் ஹரிஹரர்களும் பயந்து தூர விலகுகிறார்களெனில், அற்ப ஜந்துவாகிய நாம் விலகியிருப்பது அவசியமல்லவா?—என்றது. (தத்துவ தரிசினி).

---

**Love the neighbour as thyself**
**This is the fundamental law in the Bible.**

# இரக்கமுள்ளவர் இரக்ஷிக்கப்படுவர்

மதுராபுரி பட்டணத்தில் அம்பாலிகை என்னும் மாதுக்கு சந்திரவதனி, சுந்தரி என்கிற இரண்டு குமாரத்திகளிருந்தார்கள். தாய் சந்திரவதனிமேல் அதிகப் பிரியங்கொண்டு தன்னோடிருக்கச்செய்து சுந்தரியை வேலை ஆட்களோடு சமையல் செய்யுமிடத்திலேயே காலைமுதல் மாலைவரையில் சகலபணிவிடைகளும் புரியும்படி கட்டாயப்படுத்திவந்தாள். சுந்தரி தனக்குரிய சகல வேலைகளையும் செய்வதோடு தன் வீட்டிற்கு ஒன்றரை மைல் தூரத்திலுள்ள ஓர் நீர் ஊற்றிற்குப்போய் ஜலம் திரட்டிவரவேண்டியதாக விருந்தது. ஒரு நாள் சுந்தரி தன்னந்தனியே இருந்து ஜலம் எடுக்கும் சமயத்தில் அவ்வன தேவதை ஓர் கிழவி உருக்கொண்டு அவள் அருகில் சென்று தாகத்திற்கு ஜலம் தாவெனக்கேட்க சுந்தரி வெகு அனுதாபத்தோடு தண்ணீர் குடிக்கக்கொடுத்து உபசாரவார்த்தைகளை மொழிந்தாள். இவ்வார்த்தைகளைச் செவியுற்ற அவ்வனதேவதை சுந்தரிமேல் அதிகப் பிரியங்கொண்டு அவள் பேசும்போதெல்லாம் ரோஜா புஷ்பங்களும், முத்தும், வைரமும், விழும்படி வரமளித்தாள்.

சுந்தரி தண்ணீர்கொண்டு வீடுசேர்ந்தபோது காலதாமதம் செய்ததாகக் கடுங்கோபங்கொண்ட தாய்



அவளை ஏசிப்பேசிப் புடைக்க வருகையில் அடிக்குப் பயந்து சுந்தரி அலறி அழுது "தாயே! இது என் குற்றமன்று; நீர் ஊற்றண்டை கண்ட ஓர் கிழவியின் நிமித்தம் நான் நேரம் சென்று வரநேரிட்டதெனப் புகலவே அவள் வாயினின்று முத்தும் புஷ்பமும் முறையே சொரிந்தன. இதைச்கண்ட தாய் ஆச்சரியமுற்று, என் அருமை மகளே! இவ்வரம் உனக்கு எப்படி வந்தது?" என்று கேட்டாள். அதற்குச் சுந்தரி தனக்கு ஒரு வனதேவதை இவ்வரத்தை யளித்தாளென்று சொன்னாள். உடனே அம்பாலிகை யானவள் ஆசித்து நேசித்து வரும் அருமைப் புத்திரி சந்திரவதனியையும் இவ்வரத்தை அடையும்படி தன் வீட்டிலிருந்த வெகு சித்திரவேலை அமைந்த ஓர் வெள்ளிக் கிண்ணத்தை அவள் கையில் கொடுத்து நீர் ஊற்றிற்கு வெகுதுரிதமாய்ப் போகும்படி செய்தாள். சந்திரவதனி மிக்க கோபவேகங் கொண்டவளாய் நீர் ஊற்றை அடைந்து ஜலமெடுக்கையில் தன் அருகில் வந்து தாகத்திற்குத் தாவென்று கேட்ட கிழவிக்கு உனக்குத்தான் தொலைக்க வந்தேனே குடி என்று வெடுவெடுப்பாய்ச் சொல்லவே இவ்வார்த்தைகளைச் செவியுற்றுக் கோபங் கொண்ட அத்தேவதை இவள் பேசும்போதெல்லாம் பாம்பும், தவளைக்குஞ்சுகளும் விழச் சபித்துச் சென்றனள். அவள் வீட்டிற்கு வந்தபோது தாய் "என் அருமை மகளே! வரத்தைப் பெற்றாயா?" என்று ஆவலோடு கேட்டதற்குச் சந்திரவதனி, "பெற்றேன் அன்

னையே!" என்று புகன்றமாத்திரத்தில் பாம்பும் தவளையும் பல பலவென்று சொரியவே இவைகளைக் கண்ணுற்ற தாய் கடுங்கோபங்கொண்டு இவைகள் யாவும் சுந்தரியால் நிகழ்ந்தன; ஆகையால் இனி அவள் நமது கிரகத்தில் ஒருபோதும் இருக்கலாகாதெனப் புடைத்து வீட்டிலிருந்து விரட்டிவிட்டாள். சுந்தரி காட்டின் வழியாய்க் கதறிச் செல்லுகையில் அங்கு வேட்டையாட வந்திருந்த அப்பட்டணத்தின் இராஜகுமாரன் அவளைச் சந்தித்து அவளுடைய பரிதாபச் செய்தியைக் கேட்டுத் துக்கித்தான். அவள் அரசனோடு வார்த்தையாடுகையில் அவள் வாயிலிருந்து விழுந்த ரோஜா புஷ்பமும் முத்தும் வைரமும் அவள் பாதத்தருகே குவிந்திருக்கக் கண்டு அவளைத் தன் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுபோய்த் தன் தந்தைக்குக் காட்டி அவர் சம்மதிபெற்று அவளைத் திருமணம் செய்துகொண்டான். சுந்தரி காலதிட்டததில் மதுராபுரியின் அரசியானாள்.

---

வேறுநக் கோலுடைவர் விராட நகரத்திருந்து
பேறுபெற நின்றுதுணை பேசுங்கால்—தேறியநல்
வித்தையன்றி நல்லதுணை வேறில்லை யாதலின்
வித்தையை யென்றும் விரும்பு. A.S.B.

## விவேக சோதனை

ஒரு சமயம் ஓர் அரசன் மூன்று அழகிய பெண்களை வரவழைத்து, வைத்துக்கொண்டு—தன் மந்திரிகளைப் பார்த்து, "இவர்களில் யார் அழகு?" என்று கேட்டான். அவர்கள் ஐவர். ஐவரில் நால்வர், இவள் அழகு, இவள் அழகு என்று தங்களுக்கு எந்தப் பெண் அழகென்று காணப்பட்டாளோ அந்தப் பெண்ணைக் காட்டினார்கள். ஆனால் ஐந்தாவது மந்திரி, இம்மூவரில் இன்னார் அழகு, இன்னார் அழகில்லாதவர் என்று சொல்வதற் கென்னாலாகாது. உலகத்தில் யாருடைய மனம் எதில் பற்றுவைக்கிறதோ அதுதான் அவர்களுக்கு அழகு! அதுதான் அவர்களுக்கு உயர்ந்தது. அதுதான் அவர்களுக்கு உற்றது. இதை நாம் அநுபவத்திலே காண்கிறோமாதலால், எல்லாரும் அழகு, எல்லோரும் அழகில்லைதான்" என்று கூறி, "வேந்தே! குரூபி ஒருத்தியை ஒருவன் இச்சித்து அவள் மனம் போனபடி நடக்கிறான். குரூபி ஒருவனை ஒருத்தி இச்சித்து அவன் மனமகிழ நடக்கிறாள். இது காணும் காட்சி. ஆதலினால் அழகு மனத்தின் எண்ணத்தைப் பொருத்தது" என்று விடை புகன்றான். அரசன் அவனைப் புத்திசாலி யென்று மெச்சி அவனுக்குச் சம்பளம் உயர்த்தினான்.

புத்திமானே பலவான்.

---

# உலகநிலை

நான் என்னுடைய சிநேகிதர் ஒருவருடைய வீட்டிற்குப் போயிருந்தேன். சிநேகிதர் தக்க தனவந்தர்; வயது சென்ற கிழவர்; உத்தம குணங்களுடையவர். அவர்க்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு. பிள்ளைகளில் மூத்தவனுக்கு வயது பதினாறிருக்கும். நான் சென்ற அன்றைய தினம் அவனை வீட்டிற் காணோம். ஆகையினால் நான், என் நண்பரைப் பார்த்து, "எங்கே உங்களுடைய மூத்த பையன்?" என்று கேட்டேன்.

அவர் வெறுப்புடன், "அவன் செத்தான்" என்றார். நான் கேட்டு வியப்புற்று, "என்ன ஆச்சரியம்! நேற்றிருந்தானே"? என்றேன். அவன், "அந்தப் படுபாவி நேற்றுத்தான் செத்தான்" என்று கூறி, "உலகத்தில் பிள்ளை பெறாமலிருக்கிறானோ அவனே பாக்கியசாலி" என்று முணுமுணுத்துப் பின், "என்ன சொல்வேன், படுபாவி, சென்ற வெள்ளிக்கிழமை காலையில் என் டிரங்கிலிருந்த ரூபா3000 எடுத்துக்கொண்டுபோய் ரேஸ்கிளப்பில் கட்டித் தோற்றுவிட்டான். தோற்றுப்போனபின் அவன் செய்த வேலைத்தனம் எனக்குத் தெரிந்தது. உடனே நான் அவனைக் கூப்பிட்டுப் பத்துப் பேர் முன்னிறுத்திவைத்து முகத்திற் காரியுமிழ்ந்து செருப்பிட்



னையப்புடைத்து வீட்டை விட்டுத் துரத்திவிட்டேன். நேற்றுப் பன்னிரண்டு மணிக்கு வீட்டை விட்டொழிந்தான். என் மனமுங் குளிர்ந்தது" என்றார்.

இதைக் கேட்டதும நான் வேறு பேசுவதற்கில்லாமல், "துஷ்டப் பிள்ளைகளைத் தண்டிக்கவேண்டியதுதான். ஆனால் இந்தத் தண்டனை அதிகம்" என்றேன். அவர் சினங்கொண்டு, "ஓய் புத்தி இருக்காங் காணும் உமக்கு? நான் பணம் சம்பாதிப்பதற்கு என்னென்ன செய்திருப்பேன் தெரியுமா உமக்கு? மானியொருவன் செய்யத்தகாத காரியங்களை யெல்லாம் செய்தேன். படாத கஷ்டமெல்லாம் பட்டேன். இன்னும் நாலு முட்டை நெய்விட்டுச் சாப்பிட மனம் வருவதில்லை எனக்கு. உம்முடைய ரூபாய் போயிருந்தால் நீர் இப்படிச் சமாதானம் சொல்லமாட்டீர்?" என்று கூறிக் கடுகடுத்தார்.

நான், "கோபியாதேயும்! உம்மைப்போல் அவனும் பணம் சம்பாதிக்கத்தானே இந்த வேலை செய்தான்? 3,000-த்துடன் 3,000 வந்திருந்தால் அப்போது சந்தோஷப்படுவீர் இல்லையா?"! என்று கேட்டேன். "அவர் பணம் வந்துவிட்டால் அப்பொழுது எப்படி இருக்குமோ மனம்?" என்று கூறி, "இனி அவன் பேச்சைப் பேசவேண்டாம்" என்றார். நான் பிறகு அதைப் பற்றிப் பேசாமல் வேறுவிஷயம் பேசிக்கொண்டிருந்து வீடு திரும்பினேன். (பாலவிநோதினி)

# பாபியின் பொருள்

நான் ஒருநாள் திருவல்லிக்கேணியில் ப்ரபல புத்தக வியாபாரியும் அச்சுக்கூடத் தலைவருமாகிய ஒரு முகம்மதிய கனவானிடம் சென்று சம்பாஷித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே வேலூரிலிருந்து ஒரு மகம்மதிய கனவான் வந்து ஆசனத்தமர்ந்து எங்களோடு சம்பாஷணையிலே கலந்துகொண்டார். பொருளைத் தருமவழியிலே செலவழிப்பதைப்பற்றிப் பேச்சுண்டாயிற்று. வேலூர் கனவான் இது சம்பந்தமாய் ஒரு வரலாறு கூறினர். அது சிறந்த புத்திமதியைப் போதிக்கக் கூடியதாய் இருந்தது. அதனை உங்களுக்குக் கூறவிரும்புகிறேன்.

ஒரு பட்டணத்தில் ஒரு முகம்மதிய குரு இருந்தார். அவர் சிறந்த படிப்பாளி; ஞானவான் ஒரு சமயம் தனவந்தரொருவர் அவரிடம் போய்ப் பணிந்து "ஐயா, நான் என் பொருளில் ஒரு பாகத்தை அல்லாவின் கிருபை பெறுவதற்காதாரமான தருமவழியிலே செலவு செய்ய விரும்புகிறேன். அதற்கு ஒரு மார்க்கம் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்று பிரார்த்தித்தார்.

குரு:—அப்படியா, நல்லது. இப்படிப்பட்ட எண்ணம் பொருள் படைத்தவர்க்கு வாய்ப்பதரிது. உமக்கு இந்த எண்ணம் உண்டானது பற்றி நான் சந்



தோஷப் படுகின்றேன். செய்யுங்கள்" என்று மேலே பேசுவதற்குள் தனவந்தர்—"ஆக்ஞைப்படி நடக்க சித்தமாயிருக்கிறேன்" என்றார். குரு, நல்லது, "நீர் நாளைய தினம் சூரியோதயமாவதற்கு முன்பே எழுந்து, உமது பணப் பெட்டியிலிருந்து, உமதிஷ்டப்படி கொஞ்சம் பொருள் எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சிறிது தூரம்போய், அப்பொழுது முதல்முதலாக உமது கண்களுக்கு எதிரே தென்படுகிறவனிடம் அந்தப் பொருளைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்து என்னிடம் சொல்லிவிட்டுச் செல்லும். பிறகு சொல்கிறேன்" என்றார்.

தனவந்தர்:—"அப்படியே" என்று கூறி விடைகொண்டு தம் வீடு சென்று மறுநாள் அதிகாலையில் குரு சொன்னபடியே பொருளை யெடுத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டு வெளியே போனார்; சிறிது தூரம் போனதும் ஒரு குருடனைக் கண்டார். கண்டதும் அக்குருடனிடம் தாம் கொண்டுபோன பணத்தைக் கொடுத்துவிட்டுக் குருவினிடம வந்து செய்தி சொன்னார். குரு, "சந்தோஷம். நீர் நாளைய தினம் காலையிலும் இன்று புறப்பட்டது போலவே வீட்டைவிட்டுப் போய் முதலிற் சந்திப்பவனிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு வாரும். பிறகு சொல்கிறேன்" என்றார்.

தனவந்தர்:—"ஆகா, அப்படியே செய்கிறேன்" என்று கூறி விடைகொண்டு சென்று மறுநாள் அவ்வாறே சென்றார். சிறிது தூரம் சென்றதும் நேற்றுச்

சந்தித்த குருடன் இன்னொருவனுடன் சம்பாஷித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். பார்த்ததும் இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கவனிக்க ஒரு மரத்தின் மறைவில் மறைந்து நின்றார்.

குருடன் தன்னுடன் வந்தவனை அழைத்து, “அண்ணேன், நேற்று எனக்கு ஒரு கொடையாளி இந் நேரத்தில் கைநிறைய ரூபா தந்தனுப்பினார். அந்த ரூபாயைச் செலவழித்து நான் நேற்று அடைந்த சுகமுண்டே அதை என் ஒரு வாயால் சொல்ல இயலாது. ஆயிரம் வாய் வேண்டும். நேற்று மாலைக்குள் நான் மூன்று முறைகள் குடித்து மகிழ்ந்தேன்; பாடிக் குதித்து மனம்போனபடியிருந்தேன். என் மகனும் குடித்து மகிழ்ந்தான். நான் என் சிநேகிதனுக்குச் சூதாடப் பணம் கொடுத்தேன் இன்றும் அந்தப் பிரபு வருவாரோ என்று கவனித்துக் கொண்டிருக்கிறேன்” என்றான். அவன், “ஓ அமாவாசை தோசை தினம் தினம் கிடைக்குமென்று பார்த்தாயோ? யாரோ தயாளகுணமுடைய பிரபு குருடனென்று உன்மீது இரக்கங்கொண்டு உனக்குப் பொருள் உதவிசெய்து சென்றார். நீ குடியனென்று தெரிந்திருந்தால் உனக்கு அவர் பொருளே கொடுத்திருக்கமாட்டார். நீ செய்த பாவச் செய்கையை என்னிடம் சொல்வதுபோல் வேறெவரிடமும் சொல்லாதே! சொன்னால் உன்மீது எவரும் இரக்கம் பாராட்டமாட்டார்கள்” என்று கூறி, “ஓகோ, நம்மூரில் இப்படிப் பொருளுதவும் புண்ணியவான் யாரிருக்கிறார்?” என்றெண்ணியபடி அவனை விட்டுப் பிரிந்து சென்றான்.



இதைக் கேட்டுக்கொண்டிருந்த தனவந்தர், “ஓகோ நமது பொருள் குடிக்கும் சூதுக்குமா உபயோகமாயிற்று. சை! நாம் நல்ல எண்ணங் கொண்டு செய்த செய்கை இப்படியாயிற்றே. குருவினிடம் போய்க் கேட்போம்” என்று வியப்படைந்தபடி அங்கிருந்து திரும்பிக் குருவினிடம் வந்து பணிந்து நின்று, குருடன் தன்னுடன் வந்தவனோடு பேசிக்கொண்டிருந்ததைக் கூறி, அவர்களிடம் பொருளைக் கொடுக்காமல் திரும்பிவந்துவிட்டேன். நமது பொருள் குருடனிடம் போயிற்றே! குருடனுக்கு உதவி செய்வது பெரிய தர்மம் என்று நினைத்தேன். குருடன் இத்தகைய பாபியாயிருக்கிறான். நான் தானம் செய்யப்போய் பாபத்தையே தேடிக்கொண்டேன். ஏன் இப்படி?” என்று வினவினான்.

குரு சிறிது நகைத்து, “நல்லது; இதற்குக் காரணம் நான் நாளையதினம் கூறுகிறேன். நான் இதோ ஒரு நான்கணா என்னுடைய காசில் தருகிறேன். இதை உம்முடைய பொருளுடன் சேர்த்துக்கொண்டு போய், நாளையதினம் காலையில் ஒருவரிடம் கொடும். பின் என்னிடம் வந்து தெரிவியும்” என்று கூறி அனுப்பினார்.

தனவந்தர் மறுநாள் புறப்பட்டு வெளியே போய் முதலில் சந்தித்த ஒருவனிடம் பொருளைக் கொடுத்

தார்; அந்தப் பொருளில் குரு கொடுத்த பொருளும் சேர்த்திருந்தார். பொருளைப் பெற்றுக்கொண்டவன் பார்வைக்குப் பெரிய தனவந்தனைப்போல் நடையுடை பாவனையிலே காணப்பட்டான். ஆகையினால் நமது தனவந்தர் இவன் நாம் கொடுக்கும் பொருளைப் பெற்றுக் கொள்வானோ மாட்டானோ என்று சந்தேகித்தாராயினும் குரு கூறியபடி பொருளை முதன் முதலாகக் காண்பவனிடம் கொடுக்கக் கடமைப்பட்டவராதலால் கொண்ட சந்தேகத்தை மறந்து அவனிடமே பொருளைக் கொடுத்தார்.

அவன் பொருளைப் பெற்றுக்கொண்டதும், வந்த வழியை நோக்கித் திரும்பினான். அதுகண்ட தனவந்தர், ஆச்சரியப்பட்டு அவனுடன் கூடவே நடந்து சென்றார். அவன் கொஞ்சதூரம் போனதும் ஒரு சிறு சந்துவழியில் நுழைந்தான். அங்கேயும் நமது தனவந்தர் தன்னை தொடர்வதை அவன் பார்க்கவில்லை. சந்துவழியில் ஒரு சப்பாத்துப் புதரண்டை போனதும் அவன், "சீ இவை இனி நமக்கு எதற்கு?" என்று கூறிக் கையைத் தூக்கினான். அவன் கமுக்கட்டிலிருந்து இரண்டு புறாக்கள் விழுந்தன. அவைகளைக் கண்டதும் தனவந்தர், வியந்தவண்ணம் அவனை ஐயா, என்றழைத்தார். அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, தன்னை அழைத்தவர் தனக்குப் பொருள் கொடுத்தவராயிருக்கக் கண்டு, "ஓ வாருங்கள் ஸலாம்! ஐயா, நான் பரம ஏழை. மூன்று நாட்களாயின நாங்கள் சாப்பிட்டு.



குழந்தைகள் பட்டினியாற் சோர்ந்து சாகின்றன. ஆகையினால் நான் உணவுப்பொருள் ஏதேனும் கடவுள் கிருபையால் கிடைக்காதா என்ற நோக்கத்துடன் காலையில் எழுந்துவந்தேன். வழியில், இவ்விரண்டு புறாக்களும் இறந்து கிடந்தன. இவைகளை யெடுத்துக் கமுக்கட்டில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு இன்னும் ஏதாவது கடவுள் கிருபையால் கிடைக்காதா என்ற எண்ணத்துடன் சென்றேன். தெய்வாதீனமாய் நீர் என்னைக் கண்டு எனக்குப் பொருள் கொடுத்தீர். பொருள் பெற்றதும் ஆண்டவன் திருவருளை யெண்ணி உம்மை வாழ்த்திக்கொண்டே வீட்டுக்குத் திரும்பினேன். இனி இப்புறாக்கள் எனக்கு வேண்டியதில்லையாகையினால் இவைகளை இங்கே ஒதுக்குப் புறத்தில் போட்டேன். ஈசன் கிருபைசெய்தார் தங்கள் மூலமாக" என்றான்.

தனவந்தர் இதைக்கேட்டு மகிழ்ந்து, "நல்லது, ஆண்டவனை நம்பியவர்க்கு ஒருகுறைவு மிராது. எப்படியாவது அவர் காப்பாற்றுவார். காப்பாற்றும் கடமையுடையவ ரல்லவா அவர்? ஸலாம் நான் போய்வருகிறேன்" என்று கூறி விடைகொண்டு சென்று குருவினிடம் போய் இவ்வதிசயத்தைத் தெரிவித்தார்.

குரு, "ஐயா, உமது பொருளை இப்போது அல்லா ஏற்றுக்கொள்ள மாட்டார். அது பாவவழியி லீட்டப் பட்டது. அதனாலே தான் நீர் முதலில் குருடன் கையிற் கொடுத்த உமது பொருள் தீயவழியிற் செலவு

செய்யப்பட்டது. இன்று எம்முடைய பொருளுடன் உமது பொருளும் சேர்ந்தபடியினால் உமது பொருள், ஓர் ஏழையின் கரம் போய்ச்சேர்ந்து அவனுடைய பசித் துன்பத்தை ஆற்றுவதற்கு உபயோகமாயிற்று. பாபவழியில் சேர்க்கப்பட்ட பொருள் பாபவழியிலும் புண்யவழியில் தேடிய பொருள் புண்ணிய வழியிலும் செலவாவது நிச்சயம். இது தவறுவதில்லை. இதை உமக்குக் காட்டவே நான் உமது திரவியத்தை அவ்வாறு செலவழிக்கும்படி சொன்னேன். நீர் பாப வழியிலேயே பொருளைத்தேடி யிருக்கிறீர் நிச்சயம்" என்றார்.

தனவந்தர், உடனே குருவுக்கு வந்தனம்செய்து, "ஐயா, நான் உண்மையைக் கூறிவிடுகிறேன். தாம் என்னுடைய பொருளை நல்லவழியிலே செலவாகும்படி செய்து எனக்குப் புண்யப் பயனுண்டாக அநுக்கிரகிக்க வேண்டும்" என்றார்.

குரு, "கவனிப்போம்" என, தனவந்தர் "ஐயா, நான் பத்து வருஷத்துக்கு முன் பரம ஏழையாயிருந்தேன். என் தாயாதியில் ஒருவனைக் கொலை செய்ததில் எனக்கு ஒரு லட்சம் ரூபா சொத்துக் கிடைத்தது. பின் ஒரு பொய்க்கையெழுத்துப் போட்டு ஒருவரை வஞ்சித்ததில் எனக்கு 50 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. இப்படி பொருள் சேரவே, எனக்கு ஒருவருடைய போதனையினால் நல்லவழியில் நடக்க மனந் தூண்டியது. அதன்மேல் அவ்வழியில் பிரவேசிக்க



இப்போதுதான் தொடங்கி யிருக்கிறேன். முதலாவதாக, தங்களைக் கண்டு தரும வழியைக் கேட்டேன். இனி என்னைக் காப்பாற்றவேண்டியது தங்கள் கடமை" என்றான்.

குரு, "ஐயா, நீர் ஆண்டவனை நோக்கி நாடோறும் நீர் செய்த பாபச் செய்கைகளைக் கூறி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, ஒரு நியமத்துடன் பரம ஏழைகளுக்கு மன மகிழ்ச்சியுடனும் அநுதாபத்துடனும் அவரவர்க்கு வேண்டுவ தறிந்து பொருளுதவிசெய்து வாரும். அப்படி செய்வதில் சிறிதும் கர்வங்கொள்ள வேண்டாம். கர்வங் கொண்டால் உமது தருமம் பயன்படாது. எல்லோருடைய இன்பத்தையே நாடி நல்ல வழியில் நடந்துவாரும். ஆண்டவன் நல்லவழி காட்டுவார்" என்று கூறி அனுப்பினார்.

இக்கதையை அப்பெரியவர் கூறினார். இதைக் கேட்டதும் நான் ஆச்சரியப்பட்டு, "இது நல்லபோதனை. இன்று காலையில் விழித்தமுகம் நல்ல முகம்" என மகிழ்ந்து அதிக ஞாபகமாக வந்து உங்களுக்குக் கூறினேன். நீங்கள் பொருளாசையினால் நியாயவழி தவறி நடக்காதேயுங்கள். நியாயவழி தவறி நடப்பவனுக்கு ஆண்டவன் கிருபை செய்யமாட்டார். இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஆண்டவனில்லை, தானமில்லை, தருமமில்லை, கோயிலில்லை, குளமில்லை என்பவருடைய ஈன மதிக்குச் செவி கொடாதேயுங்கள்.

(பாலவிநோதினி.)

## கபடமற்றன் கண்பார்வை யடைந்தது

நம்பினவர் நலம் பெறுவார் என்றும் கபடமில்லாதவன் கஷ்டப்படமாட்டானென்றும் சொல்வதுண்டல்லவா? இந்த வாக்கியங்களின் உண்மையை அநேகர் தங்களுடைய அநுபவத்திலேயே கண்டிருப்பார்கள். இது சம்பந்தமாய் சமீபத்தில் நடந்த விஷயமொன்றுண்டு. கவனியுங்கள்.

ஒரு ஊரில் ஒரு மிராசுதாரன் இருந்தான். அவன் கள்ளங்கபடற்றவன்; படிப்பு இல்லாதவன். ஆனால் கல்வியிற் பெரியோர்களும் அநுபவமுதிர்ந்த வயோதிகரும் போதிக்கும் போதனைகளில் விசுவாசமுடையவன். அவர்களுடைய பேச்சைத் தெய்வ கட்டளையாகக் கொள்வபன். அவனுக்கு இரண்டு கண்களிலும் புழுவெட்டு மாதிரி ஏற்பட்டுக் கண்பார்வை குறைந்தது. அவன் நாடோறும் சந்தைக்குப்போய் ஒரு கடையில் தனக்கு வேண்டிய சாமான்களை வாங்கிவருவது வழக்கம். அந்தக் கடைக்காரனுக்கு அவனுடைய கண்களைப் பார்க்கும்போது அருவருப்புண்டானது. அதனால் அவன் ஒரு நாள் "அடேயப்பா, நான் உன்னுடைய கண்ணுக்கு ஒரு மருந்து சொல்கிறேன். நம்பிப்போட்டுக்கொள். கண்நோய் நீங்கி நல்ல பார்வை ஏற்படும்" என்றான். அந்த மிராசுதாரன், "மகாராஜனாய்! சொல்லப்பா அந்த மருந்தை உனக்குப் புண்யமுண்டு" என்றான். கடைக்காரன், இன்று மாலையில் நம்மூருக்கு வடக்கேயுள்ள காட்டுக்குப் போய் அங்குள்ள சதுரக்கள்ளியிலிருந்து ஒரு கொட்டாங்கச்சி பால் கறந்து இரண்டு கண்களிலும் விட்டுக்கொண்டு மல்லாந்தவண்ணம் படுத்துக்கொண்டு கடவுளைத்தியானம் பண்ணிக்கொண்டேயிருந்து காலையில் எழுந்திரு. கண்களிரண்டும் நல்ல பார்வையை அடைந்துவிடும். போ அப்படியே செய்" என்றான்.

அவன், "ஐயா அப்படியே செய்கிறேன். இதோ அதே ஞாபகமாய்ச் செய்கிறேன்" என்று கூறி விடைகொண்டு சென்று அன்று மாலையில் காட்டுக்குப்போய்க் கள்ளிப்பாலைக் கறந்து இரண்டு கண்களிலும் விட்டுக்கொண்டு ஈசுவரனை ஒரே உறுதியாய்த் தியானஞ் செய்யத்தொடங்கினான். தியானத்தில் அவன் தன்னையே மறந்துவிட்டபடியால் கள்ளிப்பாலினால் ஏற்படும் உபத்திரவம் அவனுக்குத் தெரியவில்லை. தியானநிலை கலைந்த சமயத்தில் அவன் கண்ணெரிச்சல் பொறுக்கமாட்டாமல் தவித்தான்; ஆயினும், தன்னுடைய வைத்தியனாகிய கடைக்காரன் சொன்னபடி நடக்கவேண்டுமென்று உறுதியுடனிருந்தமையால் அவன் எரிச்சலைப் பொறுத்துக் கொண்டு கிடந்தபடியே கிடந்தான்.

அப்பொழுது ஆண்டவனுடைய கிருபையால், வானமிருண்டு திடீரென்று பெரியமழை பொழிய ஆரம்பித்தது. மழை பெய்யும்போதும் அவன் எழுந்

திருக்கவேயில்லை. அவன் அப்படியே கிடந்தான். அவன் கண்களில் மழைத்தாரைகள் பலமாய் அடித்தபடியால் அவைகளிலிருந்த அழுக்குகளையும் கள்ளிப்பாலையும் கொஞ்சநேரத்தில் நீக்கிவிட்டன. பின் அவன் மறுநாள் காலைவரையில் படுத்திருந்துவிட்டு, எழுந்திருந்து ஆடையைப் பிழிந்து உடம்பையும் முகத்தையும் துடைத்துக்கொண்டு கண்களைத்திறந்தான். ஈசுவர கிருபையினால் கண்களிரண்டிலும் ஒரு உபத்திரவமு மில்லாமல் நல்ல பார்வை யேற்பட்டிருந்தது கண்டு அவன் ஆச்சரியப்பட்டுக் கடவுளையும் தன் வைத்தியனையும் தொழுதான்; பிறகு தன் வீட்டுக்குப் போய், உணவுண்டு, வைத்தியனுக்கு வெகுமதி கொடுப்பதற்காக இரண்டு ஆடுகளை ஓட்டிக்கொண்டு அவனிடம் சென்றான்.

இவன் கொஞ்சதூரத்தில் வரும்போதே கடைக்காரன் இவனைக் கண்டான். கண்டதும் "என்ன விநோதமிது? நான் இவனுடைய கண்களைப் பார்க்க அருவருப்புற்று, கண்ணில் கள்ளிப்பாலை அடித்துக்கொள் சொஸ்தமாய்விடும்! என்று விளையாட்டுக்குச் சொன்னேன்!' இவனுக்குக் கண் நன்றாய்த் தெரிகிறதுபோலிருக்கிறதே! என்ன ஆச்சரியமிது! கண்ணில் கள்ளிப்பால் ஊற்றிக்கொண்டபின்பும் கண் தெரியுமா? என்ன அற்புதமிது!" என்று எண்ணி வியப்புடனிருந்தான்.

மிராசுதாரன் சென்றதும், "ஐயா, உமது வைத்யம் சரியான வைத்யம்!" இந்த முறையை இத்தனை



நாட்களாய்ச் சொல்லாம லிருந்துவிட்டீர்களே! இப்படியிருக்கலாயா? உங்களுடைய ஆசீர்வாதத்தினாலும் கடவுள் கிருபையினாலும் கண்ணிலிருந்த வலி உபத்திரவம் நீங்கி நல்லபார்வையும் ஏற்பட்டது. இந்த உபகாரம் செய்த உமக்கு நான் என்ன உபகாரம் செய்யப் போகிறேன். இந்தாரும் இதுதான் என்னால் செய்யக் கூடியது. இந்த இரண்டு ஆடுகளையும் வெகுமதியாகக் கொள்ளும்" என்று கூறி ஆடுகளை அவனுக்குக் கொடுத்தான்.

கடைக்காரன் "ஆகா நான் வைத்தியனா? வாயில் வந்ததை உளறினேன்! உன்னுடைய கபடமற்ற தன்மையும் தெய்வபக்தியும் நம்பிக்கையும் உனக்குக் கண் பார்வையைக் கொடுத்திருக்கின்றன. இது நிச்சயம். ஆகையினால் இந்த வெகுமதி எனக்கு வேண்டாம். கடவுள்பேரால், நாளையதினம் பல ஏழைகளுக்கு அன்னம் போட்டுத் திருப்தி செய்துவை. அதுவே போதும்" என்று கூறித் தெய்வச்செயலை எடுத்துக் கூறிப் பெரும் பிரசங்கஞ்செய்து சந்தோஷ மடைந்தான்.

---

## உலகில் பெரிய புத்தகம்

இன்று உலகிலுள்ள புஸ்தகங்க ளெல்லாவற்றையும்விட பெரிய புத்தகம் இபேத்திய வேதநூல்தான். அதை இப்பொழுது 100 கூலிகள் தூக்கிக்கொண்டு சீனாவிலுள்ள பேகிங் என்ற விடத்திற்குக் கொண்டுபோகிறார்கள். அது 200 பாகங் கொண்டதாகும். சீனாவிற்குச் சென்றதும், சீனபாஷையில் மொழிபெயர்க்க சீனப்பாதிரிகள் முடிவு செய்திருக்கிறார்கள்.

# காவேரி நதி

இந்து தேசத்திலுள்ள முக்கியமான நதிகளுள்— காவேரி நதியும் ஒன்று. இது மலைநாடாகிய குடகு தேசத்தில் உற்பத்தியாகி எண்ணிறந்த கிளைகளாகப் பிரிந்து, திரிச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் என்னும் ஜில்லாக்களைச் செழிப்பித்து வருவதால் இதன் மகிமை எங்கும் கொண்டாடப் படுகிறது. குடகு நாடானது மைசூர் ராஜ்ஜியத்துக்கு மேற்புறத்தில் மலைகளின் மத்தியில் உள்ள ஒரு சிறு தேசம். இதில் பிரமகிரி யென்று உயர்ந்தமலை ஒன்று இருக்கிறது. இம்மலை சமுத்திர மட்டத்துக்கு 5000 அடி மேலுயர்ந்திருக்கின்றது. இம்மலையின்மேல் நவம்பர் மாதத்தில் காலைவேளையில் மப்பு மந்தாரம் இல்லாதபோது நின்று பார்த்தால் நாற்புறமும் காணப்படும் காட்சி அதிசயமாயிருக்கும்.

மேலே கூறிய பிரமகிரியின் உச்சியில் தலைக்காவேரி யென்னும் ஓரிடத்தில் காவேரிநதி முதலில் ஓர் சிற்றருவியாக உற்பத்தியாகின்றது. அங்கிருந்து அடியில் ஒரு கற்றொட்டியில் வீழ்ந்து அங்கு நின்று மூன்றடியாழமும் முப்பதடி சமசதுரமுமான ஓர் தடாகத்திற் பாய்கின்றது. இக்கற்றொட்டிக்கு மேலே ஒரு சிறிய கோயிலிருக்கிறது.



வருஷந்தோறும் அக்டோபர் மாதத்தில் இந்த ஸ்தலத்தில் ஒரு உற்சவம் நடத்தப்படும். அவ்வுற்சவத்துக்குக் குடகு, மைசூர், மலையாளம், கன்னடம் முதலிய தேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான ஜனங்கள் வருவார்கள். அக்கூட்டம் நடந்து செல்லும் காட்சி பார்ப்பதற்கு விசித்திரமாயிருக்கும்.

குடகு நாட்டார் மிக்க தைரியமும் சுறுசுறுப்பும் உள்ளவர்கள். பார்வைக்கு உயர்ந்து அழகாயிருப்பார்கள். பெண்கள் சிவப்பாயும், அழகாயும், வளர்ந்து மிருப்பார்கள். இவர்கள் தங்கள் தேயத்தை நன்கு நேசித்து வருகிறார்கள்.

காவேரியாறு குடகுநாடூடே முப்பது மைல் தூரம் சென்று அநேக உபநதிகளைப்பெற்று மைசூர் நாட்டின் எல்லையை அடையுமுன் ஒரு பெரிய ஆறாகப் பெருகுகின்றது. ஸ்ரீரங்கப் பட்டணத்தை அடையும்போது ஒரு பெரிய நதியாகிவிடுகிறது. இச்சீரங்க பட்டணத்தில் உள்ள கோட்டை ஹிந்து சரித்திரத்தில் ஆங்கிலேயர் வெற்றிகளில் மிகவும் பேர்போனது. இக்கோட்டையில்தான் ஹைதராலி அவன் மனைவி மகன் திப்பு சுல்தான் முதலியவர்களின் கோரிகளும் இருக்கின்றனவாம்.

இங்கிருந்து சுமார் நாற்பது மைல் அளவும் காவேரி நதி மிகவும் செழிப்புடன் ஓடி, கடைசியில் மைசூர் நாட்டுக்கும் கோடை வெயிலால் தபிக்கும் பள்ள நிலங்களாகிய கர்நாடக தேசத்துக்கும் நடுவில்

உள்ள மலைப்பிரதேசத்தில் கால் மைல் அகலமுள்ளதாய் இரண்டு கிளைகளாகப் பிரிந்து சிவசமுத்திரம் என்னும் தீவைச் சுற்றியோடுகின்றது. அத்தீவில் ஒரு நகரமும், பிரசித்தி பெற்ற பழைய கோவிலும் இருக்கின்றன. இங்கு ஆறு அதிக வேகமாய்ப் பாய்தலினாலும் ஆற்றின் அடித்தரை மேடும் பள்ளமுமாயிருத்தலினாலும் அதைத்தாண்டி பகைவர்கள் அத்தீவை அடிப்பது கஷ்டம். இங்கு ஒரு பாலம் இருக்கிறது. பாலத்துக்கு ஒரு மைல் கீழாகக் காவேரி நதி மேட்டில் நின்று பள்ளத்தில் விழுகின்றது. இங்குத் தான் பள்ள நிலங்களில் முதன்முதல் இந்நதி பாய்கின்றது.

இங்கு நின்று ஐம்பதுமைல் வரையில் ஊளையிடும் காடென்று சொல்லுகிற கல்லும் கரடுமா யுள்ளதும், விஷஜுரத்துக்கு இருப்பிட மானதுமான மலையினூடே இந்நதி கிழக்கு நோக்கிச் செல்லுகின்றது. இப்பக்கத்திலுள்ள காடுகளில் மிருகங்கள் அதிகமாய் வசிக்கும். இப்பக்கத்தில் இந்நதியின் கரைகள் இருநூறு முந்நூறடி உயர்ந்து இருக்கிறது. இங்கு நெடுந்தூரத்துக்குச் சரியான பாதை இல்லாததால் ஜனங்கள் இலகுவில் இப்பக்கங்களில் வர முடியாது. தென்பாகத்தில் மட்டும் ஒரு வழி இருக்கிறது. இங்கிருந்து இருபது மைல் சென்றால் காவேரிபுரம் கணவாய்க்கு வந்து சேரலாம். அங்கே இப்போதும் ஒருபெரிய கோவில் இருக்கிறது. இங்கு பிரயாணிகள் தங்கிச் செல்லுவது வழக்கம்.



இங்கிருந்து காவிரியாறு நாற்பது மைல் தூரம் தென்முகமாகச் சென்று கொண்டிருக்கிறது. இவ்விடங்களில் ஒன்றும் விளைச்சல் கிடையாது. இவ்விடத்தில் இந்நதியில் மூன்று நான்கு தீவுகள் இருக்கின்றன. ஜூன், ஜூலை மாதங்களில் நதியில் பிரவாகம் பூரணமாகி இத்தீவுகளைச் சுற்றி ஜலம் அதிகமாக ஓடும் சமயத்தில் நீர்ப்பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தற்கு வந்து சேரும். மரங்களிலெல்லாம் பறவைகளின் கூடுகள் நிறைந்திருக்கும். பலவகையான கொக்கு, நாரைகள் மரங்கள் உச்சியில் நிறைந்து உட்கார்ந்திருக்கும்.

இங்கு நின்று இந்நதி மேற்கு நோக்கிச் சென்று பவானி யென்னும் ஊருக்கருகில் நீலகிரி மலையிலிருந்து வருகின்றதும், பவானி யென்னும் அவ்வூரின் பெயரையே கொண்டதுமான பெரிய உபநதி யொன்றைப் பெறுகின்றது. அவ்விரண்டு நதியின் சங்கமத்துக்கு நடுவே ஒரு பட்டணம் இருக்கிறது. சங்கமத்திற்குச் சற்று மேலே அநேகம் கண்களுள்ள இரண்டு பெரிய பாலங்கள் கட்டப்பட் டிருக்கின்றன. இதற்குச் சிறிது தூரத்துக் கப்பால் "ஈரோடு" அண்டையில் இந்நதியோரம் இருப்புப்பாதைப் பாலமும் ஒரு பெரிய ஸ்டேஷனும் பெரிய கட்டிடங்களும் கட்டப்பட் டிருக்கின்றன: இவ்விடத்திலிருந்து இந்நதி செல்லும் வழியில் இரு பக்கங்களிலும் வயல்களும், தோப்புகளும் நிறைந்து வெகு அலங்காரமா யிருக்கின்றன. கருவூ

ரைச் சாரும்போது இந்நதி ஒருமைல் அகலமுள்ளதாகி ஆனைமலைகளி லிருந்து வருகின்ற அமராவதி என்னும் உபநதியையும் பெறுகின்றது. இவ்விடமிருந்து ஒரு கோவில் இந்நதிகளின் அலைகளினால் உண்டான மணலால் மூடப்பட்டதுடன் சில தோப்புகளும் புதைந்து போயிருக்கின்றன.

இவ்விடத்தி லிருந்து முப்பது மைல் செல்ல திரிச்சிராப்பள்ளி மலையின் சிகரம் தோன்றும். இதற்கு ஆறுமைல் மேற்கே ஸ்ரீரங்க மென்னும் தீவினால் இந்நதி இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. இக்கிளைகளில் ஒவ்வொன்றும் அரைமைல் அகல முள்ளதாய் இத்தீவின் இருபுறமும் ஓடுகின்றது. தென்கிளை தன் பெயரையே தரித்திருக்க வடகிளை கொள்ளிடம் என்னும் புதுப்பெயரைக் கொள்ளுகின்றது. இக்கொள்ளிடம் இத்தீவின் முனையிலிருந்து மறுகரை வரையில் மேலைக் கல்லணையென்று பெயரிடப்பட்ட ஒரு கல்லணையால் தடுக்கப் பட்டுள்ளது. இக்கல்லணையானது எண்ணூறு கஜ நீளமும் ஏழடி உயரமுமாய்க் கொள்ளிடத்தின் அடித்தரைமீது குறுக்காகக் கட்டப்பட்டிருக்கிறது. இதனால் காவேரியின் ஜலம் தஞ்சாவூர் ஜில்லாவின் செழிப்பான விளை நிலங்களுக்குத் திருப்பப்படுகிறது. இப்படிப்பட்ட ஆற்றின் அணை ஸர். ஆர்தர் காட்டன் என்பவரால் மூன்று லக்ஷம் ரூபாய் செலவுசெய்து கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.



ஸ்ரீரங்கமென்னும் இந்த அழகிய தீவானது 12 மைல் நீளமும் ஒருமைல் அகலமுமாகி எங்கும் தோட்டங்களும், பழ மரங்களின் தோப்புகளும், பயிர் செய்யக்கூடிய நிலங்களும் நிறைந்ததா யிருக்கிறது. இதன் மத்தியில் ஸ்ரீரங்கம் என்னும் விசாலமான கோயில் இருக்கின்றது. இங்கு சதுரமாகிய ஏழு மதில்கள் ஒன்றை யொன்று சூழ்ந்துகொண்டதா யிருக்கும். இம்மதில்கள் 25-அடி உயரமும் நான்கு அடி கனமுமாக இருக்கின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் திறமையான வேலைப்பாடுகள் அமைந்த கோபுரங்களோடு வாயில்கள் அமைந்திருக்கின்றன.

அளவற்ற பெருமைகளை யுடைய இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் கடவுள் ஸ்ரீ மஹாவிஷ்ணு. இந்த விக்ரகத்திற்கு அற்புதமான காந்தியை வீசுகின்ற வச்சிர வைடூரிய கோமேதக மரகத புஷ்பராகாதிகள் பதிக்கப்பட் டிருக்கின்றன. இன்னும் முத்துக்கள் வைத்துத் தைத்த வஸ்திரங்களும், தங்கத்தாற் செய்த குடங்களும் அண்டாக்களும் அநேகம் உள்ளன. இந்த ஸ்தலத்தைத் தெரிசிக்க அநேக இடங்களிலிருந்தும் ஜனங்கள் ஏராளமாக வருகிறார்கள். இனி நதியைப் பின்பற்றுவோம்:—

ஸ்ரீரங்கத்தி லிருந்து கொள்ளிடம் 60 மைல் வரையில் சென்று சிதம்பரம் என்னும் சிறந்த ஸ்தலத்திற்குப் பக்கத்திலுள்ள பறங்கிப்பேட்டை (Porto Novo) க்குச் சமீபமாகச் சமுத்திரசங்கம மாகின்

210993

றது. காவேரிநதி சிறுசிறு கால்வாய்களாகப் பிரிந்து தஞ்சை ஜில்லாவைச் சார்ந்த பல பாகங்களைச் செழிப்புறச் செய்து, மாயவரத்தின் வழியாக ஓடி, காவிரிப்பூம் பட்டணத்தில் சமுத்திர சங்கமத்தை யடைகின்றது. இதனால் வருஷத்திற்குச் சுமார் ஏழு லட்சம் ஏகரா நிலங்கள் வரை சாகுபடி செய்யப்படுகின்றன. இந்நதி போல் தன் ஜலத்தில் சிறிதுகூட வீண் போகாமல் பூராவையும் மனிதருக்கு உபயோகமாக்கும் நதிகள் நம் தேசத்தில் அதிகம் இல்லையென்றே சொல்ல வேண்டும். இதனாலேதான், புலவர்களும் "காவேரி"யைப் புகழ்ந்துரைத் திருக்கிறார்கள்.

(ஆனந்தபோதினி.)

---

## விநோத விஷயம்

(1) அமெரிக்காவில் ஆகாயவிமானங்களில்மட்டும் இதுவரையில் 3,000,000,000 ரூபாய்கள் செலவு செய்திருக்கிறார்களாம்.

(2) ஒரு நாளைக்கு ஒரு மனிதனுடைய ஹிருதயம் சுமார் 108,000 முறை அடித்துக் கொள்ளுகிறதாம்.

(3) ஒரு பேனா முள்ளை ஒரு உருளைக்கிழங்குக்குள் சொருகிவைத்தால் துருப்பிடிக்காதாம். அடிக்கடி வெந்த உருளைக்கிழங்கை உபயோகித்தால் சோப் அவசியமில்லையாம். கைகள் சுத்தமாயிருக்குமாம். உருளைக்கிழங்கு வெந்நீரில் துணி துவைத்தால் துணி சீக்கிரம் வெளுத்துவிடுமாம்.

(4) ஜெப்ரேல் தேசத்து ஒரு விக்ஞான நிபுணர் தண்ணீரை விறகாக அடுப்பெரிப்பதற்கு உபயோகிக்கும் முறையைக் கண்டுபிடித்துள்ளாராம்.

(5) 1928-ல் அமெரிக்காவில் தருமத்திற்காக மட்டும் 6,991,800,000 ரூபாய்கள் செலவாயுள்ளனதாம்.

## குருவின் வஞ்சகமும் மாணவனின் விவேகமும்

(70-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காலத்தில் அந்தப்பட்டணத்திற்கு ஆசாரியர் வந்திருந்தார். அவரை அழைத்து வந்து அரசன் குதிரையைக் காட்டினான். அவர் அக்குதிரையைக் கண்டதும் இது தமது மாணவன் என்பது கண்டு, "இவனைத் தண்டிக்கச் சமயம் வாய்த்தது" என்று மகிழ்ந்து அதன் மேலேறி நகரமெங்கும் ஓட்டிச் சவாரி செய்தார். அது அதிக வேகமுடையதாய் இருந்தமையால், அரசகுமாரனைப் பார்த்து, "இந்தக் குதிரை உனக்குக் கூடாது. இது மகாவேகமுடையதா யிருக்கிறது. இதை நீ வைத்திருந்தால் ஆபத்தைத் தேடிக் கொள்வாய்" என்றார். இராஜகுமாரன், "அப்படியானால் இது எனக்கு வேண்டாம். நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்று குதிரையை அவரிடம் கொடுத்துவிட்டான்.

அப்பால் குதிரையைக் கொன்றுவிட எண்ணங்கொண்டு அதனை ஓட்டிக்கொண்டுபோய் ஒரு சேற்றுக் குட்டையில் ஜலம் காட்டினார். குதிரையாயிருந்த மாணவன், குருவினுடைய வஞ்சக எண்ணமுணர்ந்துகொண்டானதலால், தண்ணீர் குடியாமல் அங்கே செத்துக்

கிடந்த ஒரு மீனுடைய உடலிலே பிரவேசித்து விட்டான். உடனே குதிரை உயிர் நீங்கிக் கீழே விழுந்து விட்டது.

குரு இந்தத் தந்திரமுணர்ந்து செம்படவர்களை வரவழைத்துக் குட்டையிலுள்ள மீன்களையெல்லாம் பிடித்துக் கொல்லும்படி ஆக்ஞையிட்டார். செம்படவர்கள் குருவின் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருக்கையில், மாணவன் பார்த்து, "என்ன விபரீதமிது! இங்கும் கேடுசெய்யத் தொடங்கிவிட்டான் என்று எண்ணி, என்ன செய்யலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு சக்கிலியன் செத்த எருமையை இழுத்துக் கொண்டு வந்தான், அதைக் கண்ட மாணவன், மீனைவிட்டுச் செத்த எருமையிலே புகுந்துகொண்டான். உடனே அந்த எருமை நடக்க ஆரம்பித்தது. அது கண்டு சக்கிலியன் சந்தோஷமடைந்து தன் தெய்வத்தைப் பாடித் துதித்துக்கொண்டே எருமையை வீட்டுக்கோட்டிப்போகயத் தனித்தான். குரு அவனிடம் போய், "சை, செத்தது பிழைத்தால் அதனை வீட்டுக்குக் கொண்டுபோவது கூடாது. அது குலத்துக்குக் கோட்ரிக் காம்பாகும் அடித்துக் கொன்றுபோடு" என்றார்.

சக்கிலியன் அவர் பேச்சை நம்பி அந்த எருமையை அங்கிருந்த ஒரு மரத்திலே கட்டிவிட்டு அதை வெட்ட அரிவாள் கொண்டுவருவதாகச் சொல்லிவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான். இதற்குள் அந்த



மாணவன் "இதற்கு எப்படித் தப்புவது" என்று சிந்தித்துக்கொண்டிருந்தான். பகவானுடைய கிருபையால், அம்மரப் பொந்தில் ஒரு கிளி இறந்துகிடக்கக் கண்டான் மாணவன். உடனே அவன் அக்கிளியினுடலிற் புகுந்து விற்றென்று பறந்துசென்றான். குரு உடனே தம்மந்திர சக்தியால் வல்லூறாய் மாறி அதைத் தொடர்ந்து சென்றார்.

இப்படிப் பறந்துசென்ற கிளி வெகுவேகமாயோடி ஒரு நகரையடைந்து அந்நகர அரசனுடைய புதல்வியின் அறைக்குள்ளே சென்று அவள் திருக்கரத்திலே உட்கார்ந்தது. இதுவரையில் தொடர்ந்து சென்ற வல்லூறு அவ்வறையின் பலகணிவழியே கிளியைப் பார்த்து, "இரு உன்னை விட்டேனா" என்ற பாவனையில் பயங்காட்டிவிட்டுச் சென்றுவிட்டது.

பின்னர் இராஜகுமாரத்தி அக்கிளியை வளர்க்க ஆசைகொண்டு அதற்குக் தங்கக் கம்பிகளினால் கூடு கட்டி அதில்விட்டு வளர்த்துவந்தாள். ஒரு நாள் அந்தக் கிளி, மாணவரூபமடைந்தது. அதைப்பார்த்துக் கொண்டிருந்த ராஜகுமாரத்தி அவனைப்பிடித்து "உன் வரலாறு கூறு" என அவன் தன் வரலாறனைத்தையுங் கூறி, "பெண்ணே நாளையதினம் ஒரு தொம்பன் கூத்தாடி வந்து உன் தந்தையின்முன் விளையாடி அதற்குப் பரிசாக, "வேந்தே உமது குமாரத்தியிடம் இருக்கும் கிளியைக் கொடும்' என்று கேட்பான். நீ முதலில் மறுத்துப் பின் அவர்களெதிரில் கோபங்காட்டி என்

கழுத்தை முறித்துப் போட்டுவிடு. பின்பு அவன் உன் கழுத்தி லணிந்துள்ள முத்தாரத்தைக் கேட்பான். நீ முதலிற் கொடுக்கமாட்டேனென்று மறுத்துப் பின் கழற்றிக் கோபத்துடன் முத்துச் சிந்திச் சிதறும்படி ஆரத்தை அறுத்துத் தூரத்திலெறிந்துவிடு. பின்னால் நடக்கும் விசித்திரத்தை நீ உன் கண்ணாலே கண்டு கொள்'' என்று கூறிப் பழையபடி கிளியாய்விட்டான்.

அப்பால் மறுநாள் அரசனிடம் ஒரு தொம்பன் கூத்தாடி தன் சீடர்கள் சிலருடன் வந்து விளையாடி அரசனை மகிழ்வித்துக் கிளியைப் பரிசுகேட்டான். அரசன் தன் மகளுக்குச் சொல்லியனுப்ப அவள் போய் அழைத்த விவரங்கேட்க, அரசன், ''உன் கிளியைத் தொம்பனுக்குப் பரிசாகக் கொடுத்துவிடு'' என, அவள் முதலில் மறுத்துப் பின், அதனைக் கழுத்தை முறித் தெறிந்துவிட்டாள். பின் தொம்பன் முத்தாரத்தைக் கேட்டான். இராஜ குமாரத்தி அதனைப் பிய்த்தெறிய அந்த ஆரத்து முத்துக்களெல்லாம் கீழே சிதறுண்டு விழுந்தன. விழுந்ததும் எல்லாம் சிறு சிறு புழுக்களாக மாறி மொய்த்தன. அது கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். இச்சமயம் தொம்பன் கோழி ரூபங்கொண்டு அப்புழுக்களைக் கொத்தினான். அப்பொழுது புழுக்களில் ஒன்று பூனையாக மாறிக் கோழியின் கழுத்தைக் கவ்விக்கொண்டது. அப்பொழுது கோழி, மானிட பாஷையில், "மாணவா! புத்தி வந்தது. இனி உன்வழிக்கு நான் வரமாட்டேன்.



தயைசெய்து எனக்குப் பிராணபிச்சை கொடு'' என்றது. பூனை, "நீ அயோக்யன், குருவல்ல. என் அண்ணனுக்கு ஒன்றும் சொல்லிக்கொடுக்காமல் அவனை மூடனாக்கி என் தந்தையை ஏமாற்றப் பார்த்தாய்! உனக்குப் புத்தி கற்பிக்கவேண்டும்! நீ படித்தவனென்று பேர் வைத்துக்கொண்டு இப்படி செய்யலாமா? ஒழுக்கமில்லாத உன் படிப்பினாற் பயனென்ன? நீ இருப்பதை விட இறப்பது மேல்'' என்றது.

இதைப் பார்த்த அரசன் வியப்படைந்து "மகான்களே, நீங்கள் யார்? சண்டைபோடுவதை விட்டு எனக்கு உங்கள் வரலாறு சொல்லுங்கள்'' என்று கேட்டான். அப்பொழுது அந்த மார்ச்சாலம் தங்கள் வரலாறனைத்தும் விவரமாய்க் கூறியது. அரசன் "நல்லது, நீங்கள் சுயரூபங் கொள்ளுங்கள். வஞ்சகஞ் செய்யத்துணிந்த குரு அடைந்த அவமானம் போதும். அதுவே அவருக்குத் தண்டனை'' என்றான்.

பிறகு இருவரும் தங்கள் சுயரூபங் கொண்டார்கள். அப்பால் அரசன் அவர்களுக்கு வேண்டுவன செய்து உபசரித்து, அவர்களுக்குள் சமாதானத்தையும் உண்டாக்கி, மாணவனுடைய தாய் தந்தையர்களை வரவழைத்து, குருவைப் பார்த்து, "இவர்களுடைய மூத்தபிள்ளை யெங்கே?'' என, அவர் தம்முடன் கூத்தாட வந்த சிஷ்யர்களில் ஒருவனாகவிருந்த அவனை அரசனிடம் ஒப்புவித்தார்.

அரசன் பின் அவ்விரு குமாரர்களுக்கும் தன்னுடைய இரண்டு குமாரத்திகளையும் விவாகம் செய்து

கொடுத்து, அவர்களை அவர்கள் தாய்தந்தையருடன் தன் ஆதீனத்திலேயே வைத்துக்கொண்டான்; குருவுக்கும் நல்ல புத்திமதி கூறி வெகுமதி தந்தனுப்பினான்.

## மின்சார விளக்கால் கண்ணுபாதை

நடுத்தர வகுப்புப் புருஷர்களுள் 100-க்கு 50 பேர்களும், அவ்வகுப்பு ஸ்திரீகளில் 100-க்கு 20 பேர்களும் குழந்தைகளுள் பலரும் மூக்குக் கண்ணாடிகள் உபயோகித்து வருகிறார்கள். வெய்யிலில் வெளியே செல்லும்போது, அநேகமாய் 100-க்கு எண்பதுபேர் கருப்புக் கண்ணாடிகள் போட்டுக்கொள்ளுகிறார்கள் இவ்வாறு பலர் கண்களில் உபாதை ஏற்படுவதற்குப் பல காரணங்களுண்டு. அவைகளில் முக்கியமானது மின்சார விளக்குகளின் வெளிச்ச மிகுதியே. அவைகளில் குறைந்த சக்தியுடையதும் எண்பது மெழுகுவர்த்தி சக்தியோடு எரிகின்றது. ஆனால் பல நூற்றாண்டுகளாக நம் முன்னோர்கள் உபயோகித்துவந்த விளக்குகளின் சக்தி இரண்டு மூன்று மெழுகு வர்த்திகளுக்கு (Candle-Power) மேலே யில்லை இதுவுமல்லாமல் மிகுந்த ஊதா (Ultra-Violet) ரேகைகளாலும் கண்களுக்குக் கெடுதல் உண்டாகிறது, என்று ஆரோக்கிய தீபிகை' எழுதுகிறது. எந்த மப்பினாலும் இந்த வெளிச்சம் மறைக்கப்படுவதில்லை. வெண்மையான சுவர்களிலும் வெண்மையான கூரைகளிலும் இந்த வெளிச்சத்தின் பிரதிபிம்பம் ஏற்படுகிறது. இயற்கை வெளிச்சத்தின் சக்தியை மரங்களும் புஷ்பங்களும் ஸ்வீகரித்துக் கொண்டுவிடுகின்றன.

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா தபாற் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரூ. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ... | ரூ. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை | ... ... விலை | ரூ. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும் ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானல் அணா மூன்று அதிகமாயிச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | |
|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு ... | ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, ... | ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்




விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

## அமிர்தாஞ்சன் டிப்போ,

**7, தம்புச்செட்டி தெரு, சென்னை.**


Vavilla Press, Madras.